Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்
இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் [illegible] National Tamil Daily [illegible] தபால் பெட்டி: எண் [illegible]

மலர் 6 [illegible] சோபகிருது மாசி 20 ஆம் நாள் ஷவ்வால் 17 (3-3-64) செவ்வாய்க்கிழமை இதழ் 22

# மொழி மகாநாட்டுக்கு ஆரம்பகட்டம்

## முக்கிய தலைவர்களை அடுத்தவாரம் பிரதமர் சந்திப்பார்

கொள்ளுப்பிட்டி, திங்கள்

மொழிப் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்கான சர்வகட்சி மகாநாட்டுக்கு முன்னேற்பாடாக பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அடுத்த வாரம் முக்கிய அரசியல் கட்சித் தலைவர்களுடன் தனித் தனியாக பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறார்.

எதிர்க் கட்சித் தலைவரும் யு. என். பி. தலைவருமான திரு. டட்லி சேனநாயக்கா, சமசமாஜகட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா, மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. பிலிப் குணவர்த்தன, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எஸ். ஏ. விக்கிரமசிங்கா ஆகிய தலைவர்களுடன் தனித் தனியாக அடுத்தவாரம் பிரதமர் பேச்சுவார்த்தை நடத்துவார். இம்மாதம் 23ந் திகதி கொழும்பில்நடைபெறவிருக்கும் மண்டலசார்பற்ற மகாநாட்டுக்கான ஆயத்த மகாநாடு நடைபெறுவதற்கு முன்னர் பிரதமர் இம்முக்கிய தலைவர்களுடனான பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்டு, அவர்களுடன் தான் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றியும், செய்யப்பட்ட முடிவுகள்பற்றியும் அரசாங்கக் கட்சிவிடம் விளக்கித் தெரிவிப்பார்.

பிரதமர், கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும்போது நியாயமான தமிழ் மொழி உபயோகம் உட்பட

(6-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் ஐக்கியமுன்னணி மீண்டும் துரித முயற்சி

### விரைவில் தலைவர்கள் சந்தித்துப்பேசலாம்

—நமது விசேஷ நிருபர்—

கொழும்பு, திங்கள்

தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கு தமிழ் பேசும் மக்களின் ஐக்கிய முன்னணியொன்றை அமைப்பதற்கான முயற்சிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தமிழரசுக் கட்சியின் ஸ்தாபக தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், ஈழம் முன்னணித் தலைவர் திரு. ஸி. சுந்தரலிங்கம் ஆகியோருக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்தி முன்னணி அமைப்பதற்கான முயற்சிகளை தனிப்பட்ட சிலரும் அரசியல் கட்சியைச் சேர்ந்த சிலரும் செய்துவருகின்றனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

## வேலை நிறுத்தம் நீடிப்பு: ஆளும் கட்சி யோசனை

### நிலைமை மோசமாகவில்லை என்கிறார் மந்திரி மகமூத்

கொழும்பு, திங்கள்

வைத்திய நிபுணர்களின் வேலை நிறுத்தம் இன்று ஆறுவதுநாளாகத் தொடர்ந்து நடைபெறுகிறது. வைத்திய நிபுணர்களும், அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தைச்சேர்ந்த டாக்டர்களும் வேலை நிறுத்தம் செய்துள்ளபோதிலும் ஆஸ்பத்திரிகளில் அவசரசேவைகள் நடைபெறுகின்றன. வைத்திய நிபுணர்கள், டாக்டர்கள் ஆகியோரின் வேலை நிறுத்தத்தினுல் பொதுவாக ஆஸ்பத்திரிக்குச்செல்லுமநோயாளர் தொகை குறைந்துள்ளது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நிலைமை ஒரே மாதிரியாகவேயுள்ளது. இரத்த வங்கிக்குப் பொறுப்பான டாக்டர் வீல் கந்தையா அவசரகாலத்துக்கு தனது சேவையை அளிப்பதாகத் தெரிவித்துள்ளதுடன் இன்று ஆஸ்பத்திரிக்குச் சென்று உதவிபுரிந்தார்.

மாத்தளை, கேகாலை, நீர்கொழும்பு அநுராதபுரம், குருநாகல், களுத்துறை, பதுளை, இரத்தினபுரி, வெலிசறை, ராகம, மட்டக்களப்பு ஆகிய ஆஸ்பத்திரிகளும் வேலைநிறுத்தத்தினுல் பாதிக்கப்பட்டுள்ளன.

### மந்திரியின் அறிக்கை

சுகாதார மந்திரி ஜனுப் பதியுதீன் மாமூத் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் 1964-ம் ஆண்டு பெப்ரிவரி மாதம் 14-ந் திகதிய மந்திரி சபையின் தீர்மானத்தை வைத்திய நிபுணர்களும் டாக்டர்களும் நன்கு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுள்ளனர். மந்திரிசபையின் திட்டத்தை அமுல்நடத்துவதில் கஷ்டங்கள் ஏற்பட்டால் பின்னர் மாற்றம் செய்துகொள்ளலாமென்றும் மந்திரி தெரிவித்துள்ளார்.

வேலைநிறுத்தத்தினுல் நிலைமை மோசமாகவில்லையென்றும் வெளிநாடுகளிலிருந்து வைத்திய நிபுணர்களை அழைக்கவேண்டிய அவசியம் இதுவரை ஏற்படவில்லையென்றும் மந்திரி தெரிவித்துள்ளார்.

### அமைச்சு அறிக்கை

அரசாங்க வைத்திய நிபுணர்கள் வேலை நிறுத்தம் சம்பந்தமாக சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் பல வைத்திய நிபுணர்கள் வெளியூர்களில் கடமையாற்றிவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பில்தான் பெரும்பாலான வைத்திய நிபுணர்கள் வேலை நிறுத்தம் செய்துவருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்த வேலைநிறுத்தம் பற்றிப் பல சங்கங்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளன. வைத்திய நிபுணர்களின் வேலைநிறுத்தத்துக்கு வெளியூர்களில் செல்வாக்கிருக்கவில்லை.

ஆஸ்பத்திரிகளில் வைத்திய நிபுணர்கள் 4 மணித்தியாலயத்துக்கு மேல் கடமை புரிவதில்லை. பிரதம ஆஸ்பத்திரியில் வருடத்தில் 8000 சத்திரசிகிச்சை நடைபெறுகிறது. இதில் வைத்திய நிபுணர்கள் செய்யும் சத்திர சிகிச்சை 600 க்கும் அதிகமாக இருப்பதில்லை.

### அரசாங்கக்கட்சி ஆலோசிக்கும்

அரசாங்கக்கட்சி நாளை செவ்வாய்க்கிழமை மாலை கூடும்பொழுது வைத்திய நிபுணர்களின் வேலைநிறுத்த நிலைமைபற்றி விவாதிக்கும். வெளிநாடுகளிலிருந்து வைத்திய நிபுணர்களை வரவழைக்கவேண்டுமென இக்கூட்டத்தில் சிலர் கேட்கவிருப்பதாகவும் தெரிகிறது.

## மின்சார என்ஜினியர்களின் வேலைநிறுத்த பயமுறுத்தல்

கொள்ளுப்பிட்டி, திங்கள்

15 சத வீத பாதுகாப்பு அலவன்ஸ் வழங்கப்படாவிடில் தாம் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக மின்சார என்ஜினியர்கள் தெரிவித்துள்ளார்கள்.

சீனப் பிரதமர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோது இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்ற காரணத்தினுலேயே தாம் இவ்வித கோரிக்கையை வற்புறுத்தாது விட்டதாகவும் இனியும் தம்மால் இது விஷயத்தில் பொறுமையாக இருக்க முடியாதென்றும் மின்சார என்ஜினியர்கள் சங்கம் அரசாங்கத்துக்[illegible]

## தலைமைப் பேராசிரியராக குணசேகரா தெரிவு

கொள்ளுப்பிட்டி, திங்கள்

பொருளாதாரம், ரசாயனம், விவசாயம் ஆகிய பகுதிகளின் தலைமைப் பேராசிரியர்கள் பதவி நியமனம் சம்பந்தமாக தெரிவுச் சபையின் சிபார்சுகளை இன்று கூடிய பல்கலைக்கழக கவுன்சில் ஆராய்ந்தபோது பொருளாதாரப் பகுதியின் தலைமைப் பேராசிரியராக டாக்டர் எச். ஏ. டி' எஸ். குணசேகரா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவருக்கு சார்பாக 11 வாக்குகளும் எதிராக ஒரு வாக்கும் அளிக்கப்பட்டது. ஏழு பேர் வாக்களிக்கவில்லை.

தமது மாணவனான டாக்டர் குணசேகராவை இப்பதவிக்கு தெரிவுச்சபை சிபார்சுசெய்திருந்ததை ஆட்சேபித்து டாக்டர் எப். ஆர். ஜெயசூரியா உண்ணாவிரதமிருந்துவருவது தெரிந்ததே.

## இலங்கைக்கு சீன உதவி

கொழும்பு, திங்கள்

இலங்கைக்கு சீன ரூ. 2 கோடி பெறுமதியான துணியை அனுப்ப உடன்பாடு தெரிவித்துள்ளது. நடப்பு வருடத்தில் இது இங்கு இறக்குமதியாகும். இலங்கையில் சர்வதேச மகாநாட்டு மண்டபம் அமைக்கவும் சீன உதவும் நடப்பு வருடத்தில் மேலதிக அளவான அரிசியையும் சீன இலங்கைக்கு அனுப்பும்.

## ஆழ்வாப்பிள்ளை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் தலைவர்

கொழும்பு, திங்கள்

எண்ணை கூட்டுறவு ஸ்தாபனத் தலைவராக திரு. கே. ஆழ்வாப்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் உணவுமந்திரியின் நிரந்தரக் காரியதரிசியாகக் கடமையாற்றி ஓய்வுபெற்றிருந்தார்.

### மணிவாக்கு

நாம் எவ்வித தவறுமே செய்யவில்லை என்றுணைப்பது எல்லாத் தவறுகளையும்விட மிகப் பெரிய தவறாகும்.

—தாமஸ் கார்லைல்.

ஈழநாடு
EELA NADU
EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம்சோபகிருது ஆண்டு மாசி 20 ம் உ (3-3-64)

## இரு பிரச்னைகள் தீர கதர் இயக்கம்

யாழ்ப்பாணம் உறுதுணையாளர் சங்கத்தாரிடம் பலரும் இப்போது உதவி கேட்கின்றனராம். தர்மப்பணம் தங்களுக்குத்தேவையில்லை என்றும், தாங்கள் ஏதாவது வேலை செய்து பிழைக்கத் தயாராக இருப்பதாயும், வேலை வாய்ப்புத்தான் தங்களுக்குத் தேவையென்றும், சுயமரியாதையுடன் வந்து கேட்பதாக, அச்சங்கக் காரியதரிசி தெரிவிக்கின்றார். இவர்களுக்கு உதவி செய்ய முடியாமல் இருப்பதாகவும் தெரிகிறது. இது முக்கியமான பிரச்னையாகும்.

வேலை செய்ய முடியாமல் கை கால் ஊனமாகியுள்ளவர்கள் தர்மப்பணம் வாங்கிப் பிழைக்க வேண்டியவர்களே. ஆனால் அப்படிப்பட்டவர்களுக்கே உதவி செய்ய போதிய பணம், அந்தச் சங்கத்திடமோ, அரசாங்க சமூக சேவைப் பிரிவினருடமோ இல்லை. பலருக்கு இப்பணம் மறுக்கப்பட வேண்டியுள்ளதாம். இந்நிலையில், வேலைசெய்யத் திறனிருந்தும் வேலைவாய்ப்புக் கிடைக்காமல், பல குடும்பங்கள் பெரிதும் அவதிப்படுகின்றன அவர்களுக்கு எப்படி உதவி செய்வது? மானத்துடன் உயிர் வாழ என்ன செய்ய வேண்டும்? என்பது பற்றி இங்கு சமூகப் பொதுநலனில் அக்கறையுள்ள ஒவ்வொருவரும், பல ஸ்தாபனங்களும் சிந்தித்து ஆவன செய்யக் கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

எல்லாவற்றிற்கும் அரசாங்கத்தையே நம்பி இருப்பதற்கில்லை. பணக்கஷ்டம், அரசியல் முதலிய காரணங்களால், நாம் போதிய உதவிகளைப் பெறுவதென்பது முயற்கொம்பு. ஆகவே நமக்கு நாமேதான் கூடுமான உதவி செய்து கொள்ள வேண்டும். இதே நிலையில் தான் மகாத்மா காந்தி இந்தியாவில் கதர் இயக்கத்தை ஆரம்பித்து நடத்தினர். ஏழை மக்களில் ஒருவேளைக் கஞ்சிக்காவது கதர்த் தொழில் வழி செய்யுமென்றும் இதைவிட வருமானத்துக்கு அதிக வாய்ப்பளிக்கும் தொழில் கிடைப்பதாயின், தாம் கதர் இயக்கத்தை விட்டு விடுவதாகவும் சொன்னர். ஆனால் கதர் இயக்கத்தைச் சிறப்பாக லட்சக்கணக்கான ஏழைகள் பெரிய வரப்பிரசாதமாகக் கருதி, அதன் மூலம் பிழைத்து வருகின்றார்கள். அந்த இயக்கம் இப்போது மீண்டும் புத்துயிர் பெறுகின்றதாகத் தெரிகிறது.

### விசேஷ பயிற்சிக்கு லண்டன் செல்கிறார்கள்

கொடிகாமம், திங்கள்

கொடிகாமத்தைச் சேர்ந்த திருவாளர்கள் எஸ். கணேசலிங்கமும், ஏ. சிதம்பரநாதனும் சிற்பக்கலையில் விசேஷ பயிற்சி பெறுவதற்காக இம் மாதம் 5-ந் தேதி லண்டன் செல்கின்றார்கள். லண்டனில் இவர்கள் நான்கு வருடங்கள் பயிற்சி பெறுவார்கள்.

பொது மராமத்து இலாகாவில் பத்து வருடங்களுக்கு மேல் பணியாற்றிய திரு கணேசலிங்கம், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் பழைய மாணவராவர். வீடமைப்பு இலாகாவில் பணியாற்றும் சிதம்பரநாதன், சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவர்.

---

'அம்பர் சர்க்கா' விலே மக்கள் நூற்கும் நூலை கதர்க் கடைகளில் கொடுத்தால் எடைக்கு எடை கதர்த் துணி கொடுப்பதற்கானஏற்பாட்டை அரசாங்கம் செய்ய முன் வந்துள்ளதாம். அதாவது நெசவுக் கூலி அனைத்தும் உதவிப் பணமாக நூற்கும் மக்களுக்கு அளிக்கப்படும். இதனால் ஏழைகள் சுலபமாகத் தங்களுக்குத் தேவையான துணிகளைத் தாங்களே உற்பத்தி செய்து கொள்வதுடன், அதிகப்படியான துணியை விற்பனையும் செய்யலாம். இது ஆச்சார்ய வினோபாபாவே செய்துள்ள விசேஷ ஏற்பாடு. இதனால் இந்தியாவில் கதர் இயக்கம் புத்துயிர் பெறுவதுடன், ஏழைகளுக்கு அதிக உதவியாக இருப்பதால் பலரும் ஆவலுடன் நூல் நூற்க முன் வரக்கூடும்.

துணிப்பஞ்சம் ஏற்பட்டு, ரேஷனும் வர இருக்கும் நம் இலங்கைக்கு இந்த இயக்கம் இந்தியாவைவிட அதிக அவசரமும் அவசியமுமாகும். சீனமுதலிய நாடுகளிடம் கைபேர்ந்தி வஸ்திர தானம் பெறுவதால் நமது துணிப் பிரச்னை தீரப்போவதில்லை. நம் சுய மரியாதைக்கும் அது உகந்ததல்ல. பக்கத்திலுள்ள இந்தியாவில் கதர் இயக்கத்துக்கு அரசாங்கம் விசேஷ உதவி அளித்து வளர்த்து வருக்கின்றது. அங்கிருந்து சில நிபுணர்களை இலங்கை அரசாங்கம் இங்கு அழைத்து இலங்கையில் கதர் இயக்கத்தை ஆரம்பிப்பதற்கு இதுவே மேலான தருணமாகும். கூட்டுறவு மொத்த விற்பனைக் கடைகளில் மணிக்கணக்காக சில கஜம் துணிகளுக்காகத் தவம் கிடந்து பொழுதை வீணக்கும் மக்கள், அதே நேரத்தில் கைராட்டையில் நூற்ருல் தங்களுக்கு வேண்டிய துணிகளைத் தாங்களே வெகுவாக உற்பத்தி செய்து கொண்டுவிடலாம் என்கிருர், இந்திய கதர் இயக்கத்தில் ஈடுபட்டுள்ள ஓர் அன்பர்.

அரசாங்கம் இவ்விஷயத்தில் எக்காரணம் பற்றியும் அசிரத்தையாக இருக்குமாயின், சிறப்பாக யாழ்ப்பாணத்திலே பொது மக்களின் நன்மையில் அக்கறை கொண்டுள்ளவர்களும், ஸ்தாபனங்களும் முன் வந்து இந்த நல்ல இயக்கத்தை இங்கு ஆரம்பிக்கக் கூடுமான முயற்சி எடுக்க வேண்டும். 'அம்பர் சர்க்கா'க்களை இங்கு மின்சார சக்தியுடன் இயக்கலாம். அப்படிச் செய்வதால் இங்கு துணிப்பஞ்சம் ஓரளவாவது நீங்குவதுடன், வேலையில்லாக் கஷ்டம் குறையும். இதே சமயம் துணிக்காக நாம் வெளிநாடுகளுக்கு அனுப்பும் பணமும் மிச்சமாகும். 'இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன், ஆயுரவேதம் முதலியவற்றுக்கான நிபுணர்களை இந்தியாவிடமிருந்து வரவழைக்கும் இலங்கை, கதர் நிபுணர்களையும் அனுப்புவதுடன், அம்பர் சர்க்கா முதலியவற்றை அளிக்கும்படியும் கேட்டால், இந்தியா மிக மகிழ்ச்சியுடன் உதவ முன் வருமென்பது எமது நம்பிக்கை.

# "தமிழ்ப் புலவர்களை அறியும் வாய்ப்பு இன்றுதான் உண்டு"

## வள்ளுவர் விழாவில் பேச்சு

மாவிட்டபுரம், திங்கள்

"அக்கால தலைமுறையில் வந்த எனக்கு அக்காலத்தில் ஊட்டப்பட்ட கல்வித்திட்டத்தின் கீழமைந்த கல்வியைத்தான் பெற முடிந்தது. அன்றைய கல்வியின் பயனுல் திருவள்ளுவரைப் பற்றி அப்போது எனக்கு ஒன்றுமே தெரியாது. அந்த வகையில் யாம் தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் தெரியாத பின் தங்கியவர்களாக வாழவும் வளரவும் வேண்டிய சூழ்நிலை அமைந்திருந்தது. கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குட்பட்ட எல்லையிலேதான் தமிழின் உணர்ச்சி நாட்டில் தலைதூக்கி தமிழ் மொழியினை வளம்படுத்தி வையத்தில் வாழ்வாங்கு வாழக்கூடிய அறநெறிகளைப் புகட்டிய மாபெரும் அறிஞர்களையும், புலவர்களையும் யாமறிந்துகொள்ளக்கூடிய வாய்ப்புக்குக் கிட்டியது".

இவ்வாறு நேற்று மாலை மல்லாகம் ஆங்கில வித்தியாசாலையில் நடைபெற்ற இரண்டாவது நாள் திருவள்ளுவர் தின விழாவின்போது மாணவர் அரங்குக்குத் தலைமை தாங்கிய வலி.வடக்கு காரியாதிகாரி திரு. தி. முருகேசம்பிள்ளை குறிப்பிட்டார்.

இரண்டாவது நாள் நிகழ்ச்சி கலாசாலையின் மாணவிகளின் தேவார பாராயணத்துடன் திரு. கே. பி. ஹரன் தலைமையில் ஆரம்பமாகியது.

உரையரங்கின் ஆரம்பத்தில் திரு. நம. சிவப்பிரகாசம் வரவேற்புரை நிகழ்த்தினர். தலைமை தாங்கிய திரு. ஹரன் பேசுகையில், திருவள்ளுவரைப் பற்றித் தெரியாதார் இன்று நம்மிடையே எவரும் இருக்க முடியாதென்றும் தான் கல்வியிலுங்காலத்தில் திருவள்ளுவர் பற்றிய எந்த விதமான குறிப்புகளும் இல்லையென்றும் கூறினர்.

உரையரங்கின் ஆரம்ப பேச்சாளர் வித்துவான் நா. சிவபாதசுந்தரனர் முதற்பாவலர் என்ற பொருள்பற்றிப் பேசும்போது குறிப்பிட்டதாவது:

அறிவுடையோரால் சொல்லப்பட்ட பல நூல்களாலும் தப்பாத அரிய வேதத்தினலும், காப்பாற்றி வைத்திருந்து உலகத்தார்க்குச் சொல்லப்பட்ட பொருள்களெல்லாம் தன்னிடத்தேகாட்டும்படிதிருக்குறளைச்சொல்லிய திருவள்ளுவரை ஒப்பார் எவ்வகைப்பட்ட பாவலருள்ளும் இல்லை.

பரத கண்டத்தின் தமிழரதும், ஆரியரதும் முதன்மையான மூலக்கருத்துக்களை எல்லாம் பரந்த ஓசையுடைய தமிழ்ச்செய்யுள் மூலம் வெளிப்படுத்தும் பாவியற்றும் வலிமை பெற்ற தமிழ்ச் சான்ரோர்களில் முதலிடம் பெற்றவர் திருவள்ளுவர். ஆதலின் அவர் முதற்பாவலர் என்ற பெயர் பெற்ருர்.

அடுத்துப் பண்டிதர் க. நாகலிங்கம் குடிமை யென்னும் பொருள் பற்றிப் பேசும்போது ஆராயும் தோறும்-ஆராய்ந்து முடிவுக்கு வர முடியாத இறைவனைப்போன்று திருக்குறளும் ஆராய்ச்சியாளரால் பல தரப்பட்ட முறையில் ஆராய்வுநடத்தப்பட்டபோதும்,மென்மேலும் அதனை ஆராய்ந்து பொருளைப்பெறவேண்டியுள்ள அரிய நூலென்றும், வள்ளுவர் குடிமைபற்றிப்பேசிய பாடல்களை விளக்கிஅவற்றுள்மானமென்ற அதிகாரத்தை ஒவ்வொரு தமிழ்மக்களும் இன்றுபடித்துப் பயன் காணவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

பண்டிதர் வ. நடராஜன் பேசுகையில்திருக்குறளில்கூறப்பட்டிருக்கும் குறள்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்டன போல வெளிப்பார்வைக்குத் தோற்றினலும் உண்மையில் அப்படியன்றுளவ்பதை விளக்கிக்கூறினர்.

அடுத்து உரையரங்கில் பங்குபற்றியவர்களுக்கு இந்து சமய விருத்திச்சங்கச் செயலாளர் பண்டிதர் க. நமசிவாயம் நன்றியுரை கூறினர்.

மாணவர் அரங்கின் போது விசாலாட்சி வித்தியாசாலை மாணவியின் பேச்சு மனனப் பகுதியில் பரிசில் பெற்ற பாடசாலை மாணவர்களின் பாட்டும், விசாலாட்சி வித்தியாசாலை மாணவர்களின் பாட்டும்,அளவெட்டி அருணசல மாணவர்களின் தெய்வப்புலவன் என்னும் வில்லுப்பாட்டும் இடம் பெற்றன. கட்டுரை, மனனப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு வலி. வடக்கு காரியாதிகாரி பரிசில்கள் வழங்கினர்.

---

### கி. மு. சங்க கூட்டம் ஒத்திவைப்பு

அக்கரைப்பற்று, திங்கள்

அக்கரைப்பற்று ஏழாம் குறிச்சி கிராம முன்னேற்றச் சங்கத்தின் பொதுக்கூட்டம் சென்ற சனிக்கிழமை மாலை ஸ்ரீ இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் தலைவர் திரு. எஸ். செம்பாப்போடி தலைமையில் கூடியது. சங்கத்தின் புதுவருட உத்தியோகஸ்தர்கள் தெரிவின்போது கூட்டத்தில் பெரும் அமளி துமளி ஏற்பட்டு உத்தியோகஸ்தர்கள் தெரிவு நடைபெருமலே ஒத்தி வைக்கப்பட்டது.

---

### ஆபிரிக்காவில் சாண்ட்ஸ் சுற்றுலா

உகண்டா, கென்யா, தங்கனீகா ஆகிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்யும் பொருட்டு பிரிட்டிஷ் மந்திரி திரு. டங்கன் சாண்ட்ஸ் லண்டனிலிருந்து புறப்பட்டார்.

---

### கிராமசபைகள் கலைக்கப்பட்டன

அக்கரைப்பற்று, திங்கள்

அம்பாரை மாவட்டத்தில் 1960-ம் ஆண்டு தேர்தல் நடந்த எட்டு கிராமசபைகள் கலைக்கப்பட்டுள்ளன. இதற்கான நியமனப்பத்திரங்கள் இம்மாத இறுதியில் நடைபெறும். தேர்தல்கள் ஏப்ரல்மாத இறுதிககுள் பூர்த்தியகிவிடும்.

பாணமை, பொத்துவில், அக்கரைப்பற்று தென்பகுதி, அக்கரைப்பற்று மத்தி, அக்கரைப்பற்று வடபகுதி, நிந்தவூர், காரைதீவு, கரவாகு தெற்கு ஆகிய கிராமசபைகளே கலைக்கப்படவிருக்கின்றன.

---

### மூவருக்கு போட்டியில்லை
### எருக்கலம்பிட்டி கி. ச. தேர்தல்

எருக்கலம்பிட்டி, திங்.

ஒன்பது வட்டாரங்களைக் கொண்ட எருக்கலம்பிட்டி கிராமசபையின் 5-ம், 7-ம், 8-ம் வட்டாரங்களைத் தவிர ஏனைய வட்டாரங்களில் 12பேர் போட்டியிடுகின்றனர். விபரம் வருமாறு:-

1-ம் வட்டாரம்: கு. க. செ. கபீபுமுகம்மது, க. ம. முகம்மதுசல்த்தார். 2-ம் வட்டாரம்: க. அப்துல்றகீம், மீ. முகமமது காசீம். 3-ம் வட்டாரம்: கு. ம. முகம்மதுமுஸ்தபா, க. இ. சேகப்துல்காதர். 4-ம் வட்டாரம்: சே. உ. நாகூர்ப்பிச்சை, கா. மு. சாகுல்காமீது. 5-ம் வட்டாரம்: ம. நூர்முகம்மது (போட்டியில்லை). 6-ம் வட்டாரம்: என். எம். சம்சதீன், எஸ். அபுல்காசீம். 7-ம் வட்டாரம்: பி. மு. முகம்மதுசாலிகு (போட்டியில்லை). 8-ம் வட்டாரம்: நா. மு. இபுருகீம் (போட்டியில்லை) 9-ம் வட்டாரம்: அ. மீ. அப்துல்ஜப்பார், சீ. க. மு. அப்துல்கையூம்.

## ஐயாறன் எழுதுவது

மாவிட்டபுரத்திலுள்ள அலுமினியம் தொழிற்சாலைக்குச் சென்ற சனிக்கிழமை சென்று பார்த்தேன். உண்மையில் திகைத்துவிட்டேன், நமது யாழ்ப்பாணத்திலே இவ்வளவு பெரிய தொழிற்சாலையைத் தனிப்பட்ட ஒருவர் வெற்றிகரமாக நடத்திவருவதைப் பார்த்து நாம் பெருமை கொள்ளவேண்டும்.

இங்கு சுமார் 300 வகையான வீட்டுப் பாவனைக்குரிய பாத்திரங்கள் இப்போது உற்பத்தியாகின்றனவாம். தமது திட்டப்படி 100க்கு 5 தான் இப்போது பூர்த்தியாகியுள்ளதாயும் இன்னும் அபிவிருத்தி செய்யவேண்டியது அதிகம் இருப்பதாகவும் மிக அடக்கத்துடன் கூறினர் இதன் அதிபர் சம்பந்தர்.

அங்கு உற்பத்தியாகும் சாமான்கள் வைப்பதற்கு இடமின்றி கூரையளவு குவிந்துள்ளன. தென் இலங்கையில் தான் இவற்றுக்கு அதிக கிராக்கியாம். மிகச் சுத்தமான அலுமினியத்தில் நவீன மெஷின்கள் மூலம் இங்கு பல பாத்திரங்களும் செய்யப்படுவதைப் பார்த்தேன்.

பெரிய பெரிய மெஷின்கள். ஹாங்காங்கிலிருந்து சீனர்கள் வந்து இவற்றைப் பூட்டியுள்ளனராம். அங்கு சென்றிருந்த சமயம் இரு சீனர்கள் மிகச் சுறுசுறுப்பாக ஒரு பெரிய மெஷினைப் பூட்டிக்கொண்டிருந்தனர். சீனர்கள்பிறர்கீழேவேலை செய்யமாட்டார்களாம். அவர்களைக் கட்டி மேய்ப்பது மிகவும் கஷ்டம். என்றாலும் உண்மை உழைப்பாளிகள். இந்தத் தொழிற்சாலையை நவீன முறையில் அமைக்க அவர்கள் உதவிவருவதைக் கண்டேன்.

* * *

அங்கே என் மனதைப் பெரிதும் கவர்ந்தது அங்குள்ள தொழிலாளர் தான். அவர்கள் மிக முகமலர்ச்சியுடன் இருப்பதைக் கண்டேன். இக்காலத்திலே இப்படிப்பட்ட தொழிலாளரைக் காண்பது அரிதல்லவா?

ஒரு வாலிபத் தொழிலாளி அங்கு வந்து இரண்டு வருஷம் தான் ஆகிறதாம். அதற்குள் நல்ல தேர்ச்சி பெற்றுவிட்டதாகவும் சீக்கிரத்தில் ஒரு இஞ்சினியரைப் போலவும் ஆகிவிடலாமென்றும் அறிய மிக மகிழ்ச்சியாக இருந்தது. நம் வாலிபர்களுக்கு மட்டும் நல்ல சந்தர்ப்பமளித்தால் அவர்கள் எந்த வேலையையும் மிகத் திறமையாகச் செய்யக்கூடுமென்பதை அங்கு கண்டேன்.

* * *

16 வருடங்களுக்கு முன்பாக தமது 42வது வயதிலே அரசாங்க சேவையை உதறித் தள்ளிவிட்டவர் அதிபர் சம்பந்தர். யாழ்ப்பாண்த்தில், பிறரது உதவி பெருமல் சொந்த முயற்சியால், இத்தொழிற்சாலையை வெற்றிகரமாக நடத்திவருவது மிகப் பெரிய காரியம்.

இங்கு ஒரு தொழிற்சாலையை நடத்துவது எவ்வளவு கஷ்டமென்பது அதை நடத்தியவருக்குத் தான் தெரியும். அவரது வெற்றி யாழ்ப்பாணத்தின் வெற்றியாகும்.

* * *

இந்த வெற்றியின் ரகசியம் என்ன தெரியுமா? மாவிட்டபுரம் கந்தசுவாமி தான் என்பது அதிபர் சம்பந்தரின் நம்பிக்கை.

அக்கோவிலில் கல் திருப்பணியை அவர்தான் தன்னந்தனியாகச் செய்விக்கின்ருராம். கீர்த்த மண்டபத்தில் சிற்ப அழகுடனே கற்தூண்கள் எழுந்துவருகின்றன. இத் திருப்பணிக்குச் சில லட்சங்களாகுமென்று அறிந்தேன். அந்த முருகன் இதையெல்

(5-ம் பக்கம்பார்க்க )

# அஸ்ஸாமில் 75,000 அகதிகள்

## கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வெளியேற்றம் அதிகரிப்பு

### உலக ராஜதந்திரிகளுக்கு 31 எம். பி. க்கள் வேண்டுகோள்

புதுடில்லி, மார்ச் 2

**கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து அஸ்ஸாமுக்கு வந்துள்ள அகதிகளின் எண்ணிக்கை இப்போது 7,5000 ஆக உயர்ந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. பாகிஸ்தானில் சிறுபான்மையினர் பிரச்னை மிக அபாயகரமான நிலைக்கு வந்துவிட்டதாயும், இது உலகப் பிரச்னையாகிவிட்டதாயும் 31 பாராளுமன்ற அங்கத்தினர்கள் கூறியிருக்கிறார்கள்.**

அஸ்ஸாமிலுள்ள காரோ ஹில் டிவிஷனுக்கு இதுவரை 75,000 பாகிஸ்தான் சிறுபான்மையினர் வந்திருப்பதாயும், இவர்களில் பாதிப்பேர் கிறிஸ்தவர்களென்றும் அஸ்ஸாம் முதன்மந்திரி திரு. சாலிஹா அறிவித்தார்.

இந்த அகதிகள் மீண்டும் பாகிஸ்தானுக்கு ஒருபோதும் போவதில்லையென அறிவித்திருக்கிறார்கள். கச்சாய், மூஸாய் பகுதிகளுக்கும் அகதிகள் வந்தவண்ணம் இருக்கின்றனர்.

நிலைமையை நேரில் அறியும் பொருட்டு மத்திய மந்திரி திரு. மேஹர் சந்த்கன்னா கௌஹாட்டிக்கு வந்திருக்கிறார்.

கிழக்குப் பாகிஸ்தான் சமபவங்களே கல்கத்தாவிலும், இதர இடங்களிலும் ஏற்பட்ட விளைவுக்குக் காரணமென்றும் ஆனால் இந்தியா தன் சிறுபான்மை மக்களுக்குப் பூரண பாதுகாப்பு அளிக்குமென்றும் அவர் கூறினார்.

பாகிஸ்தானிலுள்ள சிறுபான்மையினர் மனிதாபிமானமுடன் நடத்தப்படவேண்டும் என்றும், உலக ராஜதந்திரிகள் இவ்விஷயம் பற்றி பாகிஸ்தானுக்கு எடுத்துரைக்கவேண்டும் என்றும் 31 பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

சிறுபான்மையினர் நாட்டைவிட்டுச் செல்லும்படி பாகிஸ்தான் நிர்ப்பந்தித்துவருவதாயும் அவர்கள் கூறியுள்ளனர்.

## சீன-பாகிஸ்தான் உறவுபற்றி அமெரிக்கா கவலை

வாஷிங்டன், மார்ச், 2

பாகிஸ்தானுக்கும், சீனவுக்குமிடையே வளர்ந்து வரும் உறவு குறித்து அமெரிக்க உதவி வெளிநாட்டு மந்திரி திரு. ஜோர்ஜ் பால் கவலை தெரிவித்தார். அமெரிக்க பாகிஸ்தான் உறவு பாதிக்கப்படக்கூடிய அளவுக்கு ஜனாதிபதி அயூப் சீனவுடன் நட்புரிமை கொண்டாடமாட்டாரெனத் தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவிடம் இருந்து பாகிஸ்தான் 400 கோடி டாலர் உதவி பெற்றிருக்கிறதென்றும், சீனவிடமிருந்து இத்தகைய உதவியை அது ஒருபோதும் பெறமுடியாதென்றும் 'வாஷிங்டன் ஈவினிங் ஸ்டார்' பத்திரிகை எழுதியிருக்கிறது.

## ஜீவாதார பிரச்னை

ஸ்ரீநகர், மார்ச் 2

காஷ்மீரின் தற்போதைய ஜீவ மரணப் பிரச்னை பொருளாதார அபிவிருத்தியே என புதிய பிரதம மந்திரி குலாம் முகம்மது சாதிக் கூறினார்.

## நேபாளம் பங்குபற்றும்

காட்மாண்டு, மார்ச் 2

இலங்கையில் நடைபெறவிருக்கும் மண்டலசார்பற்ற நாடுகளின் தூதர்கள் மகாநாட்டில் நேபாளம் கலந்துகொள்ளும் என அறிவிக்கப்பட்டது.

## 'வெளிச்ச வீடு' கப்பல்

கல்கத்தா, மார்ச் 2

யூகோஸ்லேவியாவில் கட்டப்பட்ட இந்தியாவின் "கலங்கரைவிளக்க" கப்பல் கல்கத்தாவில் ஒப்படைக்கப்பட்டது. இதன் பெறுமதி 153 லட்சம் ரூபாய்.

## சுவீடிஷ் இளவரசி திருமணம்

ஸ்டாக்ஹோம், மார்ச் 2

சுவீடிஷ் இளவரசி மார்கரட்டா, லண்டனைச் சேர்ந்த 40 வயதான ஜோன் அம்ப்லர் என்ற பிரடிஷ் வர்த்தகரை மணம்புரியவிருக்கிறார்.

சுவீடிஷ் மன்னர் கஸ்டால் அடோப்பின் நான்கு பேத்திகளில் ஒருவரான இளவரசி மார்கரட்டா, 30 வயதான ஒரு விதவையாகும்.

1958-ம் ஆண்டிலிருந்தே பிரிட்டிஷ் பிரதமரின் உறவினரான திரு ரொபின் டக்கிளஸ் ஹியூம், பெல்ஜிய மன்னர் பாவோதீன் உட்பட பலருடைய பெயர் அவரது விவாகப்பட்டியலில், கடந்த 6 ஆண்டுகளாக அடிபட்டுவந்தது.

## 3 மாதத்தில் 3 ராஜ குழந்தைகள்

லண்டன், மார்ச் 2

இவ்வாண்டு எதிர்பார்க்கப்பட்ட 4 ராஜ குடும்பக் குழந்தைகளில் ஒன்றை அலெக்ஸான்டிரா இளவரசி பிரசவித்தது பற்றி ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. இம்மாதம் எலிஸபெத் மகாராணி தன் 4-வது குழந்தையைப் பிரசவிப்பார். ஏப்ரல் கடைசியில் மார்கரட் இளவரசி தன் 2வது குழந்தையையும், மே மாதம் கெண்ட் கோமகள் தன் 2வது குழந்தையையும் பிரசவிப்பார்கள்.

## வாஷிங்டனில் வில்சன்

வாஷிங்டன், மார்ச் 2

அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸனுடன் பேச்சு நடத்தும் பொருட்டு, பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவர் திரு. ஹரோல்ட் வில்சன் வாஷிங்டன் வந்தார்.

## 'இந்தியாவுக்கு சீன அபாயம் இல்லை'

கராச்சி, மார்ச், 2

சீனவுடன் யுத்தம் ஒன்றை நடத்துவதற்காக இந்தியாவை ஆயுதபாணியாக்கும் முயற்சியில், பணத்தை வீணாக்க வேண்டாமென பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான் அமெரிக்காவுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

சீனவிடமிருந்து இந்தியாவுக்கு எவ்வித அபாயமும் இல்லையென்றும், அப்படியே சண்டை ஏற்பட்டாலும்கூட பாதுகாப்புக்காக இந்தியா செலவிடும் பணத்தினால் அது பொருளாதார பலவீனம் அடையுமென்றும், அதேசமயம் பாகிஸ்தானுடன் அதற்கு நெருக்கடி இருக்கிறதென்றும், இந்த நிலையில் சீனவை அதனால் எதிர்க்கமுடியாதென்றும் அயூப் கூறினர்.

## சூ-என்-லாய்

பீக்கிங், மார்ச் 2

சீனப் பிரதமர் சூ-என்-லாய் கோஷ்டியினர் பீக்கிங் திரும்பும் வழியில் தென் சீன வந்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

## ஜனப்பெருக்கு

நியூயோர்க், மார்ச் 2

தூரகிழக்கில் அதிகரித்துவரும் ஜனத்தொகை விகிதம், உணவு உற்பத்தியை மிஞ்சிவிட்டதாக ஐ. நா. சர்வே ஒன்று கூறுகிறது.

## சர்வஜனவாக்குரிமை: பாகிஸ்தான் நிராகரிப்பு

ராவல்பிண்டி, மார்ச் 2

அடுத்த தேர்தலில் நேரடி வாக்கெடுப்பின் மூலம் பாகிஸ்தானில் ஜனாதிபதி தெரிவுசெய்யப்படவேண்டுமென்ற வாக்குரிமைக கமிஷனின் யோசனையை அயூப்கான் நிராகரித்துவிட்டார். தற்போதுள்ள 80,000 அங்கத்தினர்களே ஜனாதிபதியைத் தெரிவுசெய்ய வேண்டும் என்றும், இது தவிர்ந்த வேறு யோசனை எதையும் பாகிஸ்தான் ஏற்காது என்றும் அறிவிக்கப்பட்டது.

## பிரிட்டன் ஆதரவு

லண்டன், மார்ச் 2

கம்போடியா சம்பந்தமாக சர்வதேச மகாநாடு ஒன்றை நடத்தும் முயற்சியில் பிரிட்டன் ஈடுபட்டுவருமென ரஷ்யாவுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. சர்வதேசக் கமிஷன் நடைபெறும் யோசனையை வரவேற்பதாக, ரஷ்யாவின் கடிதத்துக்கு அது பதில்எழுதியிருக்கிறது.

## கியூபாவுக்கு மேலும் பஸ்கள்

மியாமி, மார்ச் 2

ரூ. 15 லட்சம் டாலர் பெறுமதியான 50 பஸ்களுக்கும், உபகரணங்களுக்கும் பிரிட்டிஷ் லேலண்ட் மோட்டார் ஸ்தாபனத்துடன் கியூபா புதிய ஒப்பந்தமொன்றைச் செய்திருப்பதாக ஹவானா ரேடியோ அறிவித்தது. ஏற்கனவே ஆர்டர்செய்யப்பட்ட 400 பஸ் தவிர, இது புதிய ஆர்டராகும்.

## 'போர்மோஸாவை அமெரிக்கா கைவிடாது' -ரஸ்க்

வாஷிங்டன், மார்ச் 2

"120 லட்சம்மக்கள்கொண்ட போர்மோஸாவை ஒருபோதும் கம்யூனிஸ்ட் வலைக்குள் விழ அமெரிக்கா அனுமதிக்கமாட்டாது. அந்த நாட்டுக்கு அளித்துள்ள உறுதியைப் பாதுகாப்போம்' என வெளிநாட்டு மந்திரி திரு ரஸ்க் கூறினர்.

"தென்கிழக்காசியாவில் சீன ஆக்கிரமிப்பில் இறங்கியிருக்கிறது.

இந்தியாவை அது தாக்கி, நாட்டின் ஒரு பகுதியைப் பிடித்து வைத்திருப்பதன் மூலம், தென்கிழக்காசியாவுக்கு அது அபாயமாய் விளங்குகிறது.

ஆபிரிக்காவிலும், லத்தீன் அமெரிக்காவிலும் சதி, குழப்பம், நாசவேலை ஆகியவற்றைச் சிருஷ்டிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது.

சீனக் கம்யூனிஸ்ட் அரசாங்கம் சமாதானத்தை நிலைநாட்ட பலாத்காரத்தை விரும்பும் வரை அதை நாம் ஏற்கமுடியாது" என்றும் ரஸ்க் கூறினர்.

## சீனவுக்கு ஜப்பான் கடன்

டோகியோ, மார்ச் 2

ரூபா 15 கோடி மதிப்புள்ள பொருட்களை நீண்டகால கடன் அடிப்படையில் சீனவுக்கு, ஜப்பான் ஏற்றுமதிசெய்யவிருக்கிறது.

## முட்டைக்கு நஷ்டஈடு

நியூயோர்க், மார்ச். 2

பயிற்சி ஒத்திகைகளில பறந்து திரிந்த ராணுவ ஹெலிகோப்டர்களைப் பார்த்து தென்கரோலினவிலுள்ள கோழிகள் பயந்து விட்டதால் அரசாங்கம், இவற்றின் சொந்தக்கார விவசாயிகளுக்கு ரூ. 3.73 லட்சம் நஷ்டஈடு கொடுத்தது. கடந்த கோடைப் பயிற்சி ஒத்திகையின்போது ஹெலிகோப்டர்களை அஞ்சத்தக்க பருந்துகள் எனத் தவருகக் கருதிப் பயந்துவிட்டதால் ஒன்றரை லட்சம் முட்டைகளை அவைகள் இடவில்லை.

## அமெரிக்காவின் முதல் நீக்ரோ மந்திரி

வாஷிங்டன், மார்ச் 2

அமெரிக்க அரசாங்கத்தில் உயர் அந்தஸ்திலுள்ள திரு. கார்வ் ரோலன் என்ற நீக்ரோ, அமெரிக்க செய்திஸ்தாபன டைரக்டராக ஜனாதிபதி ஜோன்ஸனல் விஸ்வாசப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.

அமெரிக்க சரித்திரத்திலேயே ஜனாதிபதியின் மந்திரிசபையில் அமரும் முதலாவது நீக்ரோ இவர்தான்.

## ரூபா 400,000 நஷ்டம்

கொழும்பு, திங்கள்

ஜின்தோட்டாவிலுள்ள ஒட்டுப்பலகை கார்ப்பரேஷனில் நேற்றுமுதல் தாமதமாக வேலை நடைபெற்றுவருவதால் அரசாங்கத்திற்கு ரூபா 400,000 நஷ்டமேற்பட்டுள்ளது.

## அராபிய மகாநாடு

டமாஸ்கஸ், மார்ச் 2

வருகிற 4-ம் திகதி கெய்ரோவில் நடைபெறவிருந்த அராபிய வெளிநாட்டு மந்திரிகள் மகாநாட்டை 10ம் திகதி வரை ஒத்திவைக்கும்படி சவூதி அராபியாவும், சூடானும் கேட்டுள்ளன.

## ஜெமினி வாசன் ராஜ்ய சபைக்கு போட்டி

புதுடில்லி, மார்ச் 2

டில்லி ராஜ்யசபையில் இவ்வாண்டு காலியாகும் ஸ்தானங்கள் ஒன்றில் போட்டியிட திரு எஸ். எஸ். வாசனை (ஜெமினி வாசன்) காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்ட் தேர்ந்தெடுத்திருக்கிறது.

## சாந்தா ஆப்தே காலமானர்

பம்பாய், மார்ச் 2

பிரபல திரைப்பட, நாடக நடிகையான ஸ்ரீமதி சாந்தா ஆப்தே கடந்த 25-ம் திகதி பம்பாயில் காலமானர். அவருக்கு வயது 41. சுமார் 20 ஆண்டுகளாக திரை உலகில் உன்னத புகழுடன் விளங்கிய சாந்தா ஆப்தே ஹிந்தி, தமிழ், மராத்தில் படங்களில் நடித்திருக்கிறார். கடந்த 10 ஆண்டுகளாக மராத்தி நாடகங்களில் நடித்து வந்தார்.

## தந்தையை மைந்தன் வீழ்த்துவதா?

நைரோபி, மார்ச் 2

கென்யாவில் ஒரு புரட்சியை ஆரம்பிக்கவே தாம் நைரோபியில் இருந்ததாகக் கூறப்படும் வதந்தியை ஸான்ஸிபார் புரட்சி சபைத் தலைவர் பீல்ட் மார்ஷல் ஒகெல்லோ மறுத்துரைத்தார்.

"பிரதம மந்திரி ஜோமோ கென்யாட்டா நாட்டின் தந்தை என்பது அனைவருக்கும் தெரியும். அவரது ஒரு குழந்தையான நான் எவ்வாறு அவரை வீழ்த்தமுடியும்?" என நிருபர்கள் மகாநாட்டில் அவர் வினவினர்.

திரு. ஒகெல்லோ இவ்வாரம் திரு. கென்யாட்டாவுடனும், உகண்டா பிரதமர் திரு. மில்டன்ஒபோடேயுடனும் பேச்சு நடத்தினர்.

## சென்னை மேல்சபை காங்கிரஸ் அபேட்சகர்

புதுடில்லி, மார்ச் 2

மத்திய காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு கிழக்கார்டவர்களை சென்னை மேல்சபையில் 1964-ம் ஆண்டு ஏற்படும் காலியாகும் ஸ்தானங்களுக்குப் போட்டியிட காங்கிரஸ் கட்சி அபேட்சகர்களாகத் தேர்ந்தெடுத்திருக்கிறது:

திரு. ஆர். வெங்கட்ராமன், திரு. எம். ஏ. மாணிக்கவேலர், திரு. என். எம். எதிராஜ், திருமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி, திரு. மோகன்லால் மேத்தா.

## 'ஸ்ரீலங்கா' விற்பனை குறைவு

பண்டாரவளை திங்கள்

எல்லாத் தபால்கந்தோர்களுக்கும் அனுப்பப்பட்ட அரசாங்க செய்திப் பத்திரிகையான 'ஸ்ரீலங்கா' பத்திரிகை மிகக் குறைவாகவே விற்பனையாகின, சில தபால்கந்தோர் அதிபர்கள் மூன்று பிரதிகளுக்குமேல் விற்பனைசெய்யவில்லை அப்பத்திரிகையில் பிரதம மந்திரியினதும், மற்றும் மந்திரிகளினதும் பேச்சைத் தவிர வேறு ஒன்றுமில்லையென பலர் தெரிவித்தார். விற்கப்படாத பிரதிகள் மாதக்கடைசியில் திருப்பியனுப்பப்படும்.



# மாணவர் மலர்



# விசித்திர மனிதன்!

மகான்

சிறிது நேர யோசனைக்குப் பின்னர் சி. ஐ. டி. ஷகானே முதலில் பேச்சை ஆரம்பித்தார்.

"சங்கரலிங்கம்பிள்ளையின் மரணத்தின் மர்மத்திற்குள் பிரவேசிக்கு முன்னர் டாக்டர்களின்...ஏன் உங்களின் கூற்றையே உண்மையாக எடுத்துக் கொள்கிறேன் இன்ஸ்பெக்டர். உங்கள் தலைமீதுவிழுந்த பெரியபாருங்கல்லை திரு. அருளப்பன் என்மீது போட்டு விட்டார். சங்கரலிங்கம்பிள்ளையின் கொலைக்குரிய காரணத்தை எப்படியும் கண்டு பிடித்தேதீர வேண்டும். இதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று: திரு. அருளப்பனின் கோரிக்கைக்கு நான் இணங்கியது. மற்றது...சங்கரலிங்கம்பிள்ளை எனது நண்பர்" என்றார் ஷகான்.

"என்ன ...... சங்கரலிங்கம் பிள்ளை உங்களின் நண்பரா..." என்று வியப்புடன் கேட்டார் இன்ஸ்பெக்டர் பிரான்சிஸ்.

"ஆமாம் இன்ஸ்பெக்டர். சங்கரலிங்கம்பிள்ளையை எனக்கு நன்றாகத் தெரியும். திருமணமாகி திரு. சங்கரலிங்கம் பிள்ளை தமது மனைவியுடன் சிங்கப்பூருக்குப் போகமுன்னர் அவர் வவனியாவில் இருந்ததும் கிளிநொச்சியில் பலஏக்கர் நெற்காணி இருந்ததும் எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. சிங்கப்பூரிலிருந்து சில வருடங்களுக்கு முன்னர் அவர் இலங்கை வந்து சிங்கப்பூருக்கு திரும்பிய சமயத்தில்கூட நான் அவரை பலாலி விமானநிலையத்தில வழியனுப்பி வைத்திருக்கின்றேன்" என்றார் ஷகான்.

ஷகானுக்கும் இன்ஸ்பெக்டருக்குமிடையே சுமார் பதினைந்து நிமிடநேரமாக நடைபெற்ற பேச்சில் பலமுக்கிய விஷயங்கள் அடங்கியிருந்தன திரு. அருளப்பனின் கோரிக்கைமீது சங்கரலிங்கம் பிள்ளையின் கொலை மர்மத்தைக் கண்டுபிடிக்க இணக்கம் தெரிவித்த துப்பறிவாளர் ஷகானிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றுவிட்டார் பொலிஸ் இன்ஸ்பெக்டர்பிரான்சிஸ். இன்ஸ்பெக்டர் பிரான்சிஸின் 'ஜீப்' மறைந்தது முதல், ஷகானின் மூளை தீவிரமாக வேலைசெய்ய ஆரம்பித்தது. கதிரையிலிருந்து எழுந்து அருகிலிருந்த டெலிபோனின் இலக்கங்களைச் சுழற்றினர். அவரின் ஆட்காட்டி விரலில் அகப்பட்ட எண்கள் 65384!

★

விசாலமான வீடு. அறைகள் எல்லாம் சுத்தமாகவிருந்தன. ஆட்கள் புழங்கக்கூடியதற்கான அறிகுறிகள் காணப்படவில்லை. ஆனால் சுவரில் பல நிழற்படங்கள் மாட்டப்பட்டிருந்தன. சிரித்துக் கொண்டே பேச்சை ஆரம்பித்தார் துப்பறிவாளர் ஷகான்.

"மிஸ்டர் அருளப்பன், இந்த வீட்டில் வேறு யாருமில்லையோ" என்றார் ஷகான்.

"அதை ஏன் கேட்கிறீர்கள் ஸார். பூத்துக்குலுங்கிய எனது குடும்பம் இரண்டாவது உலக யுத்தத்தில் சின்னபின்னமாகி சிதறிவிட்டது" என்றார் அருளப்பன்.

"ஏன்...என்ன காரணம்" என்று ஷகான் கேட்டபோது தமது மனைவி வேறுஇனத்தை சேர்ந்தவர் என்றும் இரண்டாவது உலக யுத்தத்தின் போது ஒருமகனைவிட்டு மற்றைய எல்லோருமே கொடிய வியாதியொன்றுக்குப் பலியாகிவிட்டனர் என்றும் கூறினார் அருளப்பன். இரண்டாவது உலகயுத்தத்தின்பின்னர் மக்களைப் பீடித்திருந்தகொடிய நோயை ஷகானும் அறியாதவரல்ல.

"அப்படியென்றால் உங்களின் மகன் எங்கே...? என்றார் ஷகான்.

"சின்னவயதில் ...... அவனை நான் நல்லூர்த் திருவிழாவில் பறிகொடுத்துவிட்டேன்

3

ஸார்..." என்று சொல்லி சிறுபிள்ளையைப் போன்று அழுதார் அருளப்பன்.

'என்ன செய்வது. துன்பம் வரும்பொழுது ஒரே தடவையில் அல்லவா வந்துவிடுகிறது. இவ்வளவு வயதாகிய பின்னரும் நீங்கள் இப்படித் தேம்பி அழுவது...எனக்கே பரிதாபமாகமிருக்கிறது' என்றார் ஷகான்.

"அப்படியென்றால் இந்த வீட்டில் எவருமே இல்லையா" எனறு மீண்டும் பேச்சைஆரம்பித்தார் ஷகான்.

"இருக்கிறார்கள் நான் அடிக்கடி வெளியூர் செல்வதால் வீட்டைக் கவனிப்பதற்காக ஒரு குடும்பத்தையே சகலவசதிகளும் அவர்களுக்கு அளித்து இங்கே அமர்த்தியுள்ளேன் ஸார்" என்றார் அருளப்பன்.

"அப்படியா..." என்று கூறிவிட்டு எழுந்த ஷகானை, "வாருங்கள் எனது வீட்டைப் பாருங்கள்" என்று அழைத்தார் அருளப்பன். வீட்டின் அறைகளைப் பார்வையிட்டுக் கொண்டு வந்த ஷகான். ஏன் அறைகளையெல்லாம் ...... அலுமாரிகளைக்கூடப் பூட்டாமல் திறந்துவிட்டிருக்கிறீர்களே ... இங்கிருப்பவர்கள்மீது உங்களுக்கு அவ்வளவு நம்பிக்கையா?" என்றார். "ஆமாம் எனது வீட்டிலுள்ள குடும்பம் 10 வருடங்களாக இங்கே இருக்கிறது ஸார். இன்றுவரை அவர்களிடம் எவ்விதமான தவறையும் நான் கண்டு பிடிக்கவில்லை..." என்றார் அருளப்பன். இருவரும் கதைத்துக் கொண்டே அருளப்பனின் ஆபீஸ் அறைக்குள் நுழைந்தனர். அங்குள்ள மேசைமீதிருந்த அலங்காரமான பொருளொன்று ஷகானைக் கவர்ந்தது.

(தொடரும்)

# மூளைக்கு வேலை

சென்ற வாரம் நான் இப்பகுதியில் கேட்ட கேள்வி பலரின் மூளைக்கு நல்ல விருந்தாக அமைந்திருக்கிறது என்பதை நீங்கள் அனுப்பிய தபாலட்டைகள் நிரூபித்துவிட்டன. நான்கு நாட்களுக்குள் வந்து குவிந்த உங்களின் தபாலட்டைகளை அலசிப் பார்த்ததில் மூவர் மட்டுமே சரியான விடையை அனுப்பியு ளனர். நான் கேட்ட கேள்விக்குரிய விடை: மொனக்கோ (MONACO).

இக்கட்டத்தில் மொனக்கோவைப்பற்றி உங்களுக்குச் சில தகவல்களையும் கூற விரும்புகிறேன்.

1956-ம் ஆண்டில் எடுக்கப்பட்ட ஜனத்தொகை மதிப்பீட்டின்படி மொனக்கோ நாட்டில் 20,422 மக்கள் வசிக்கிறார்கள். லகொண்டாமைன், மொன்டிகார்லோ, மொனக்கோ என்று மூன்று முக்கிய நகரங்கள் உண்டு. நகரசபை நிர்வாகம், 700 பேரைக் கொண்ட உள்நாட்டு பொலிஸ்படையுண்டு. இங்கு வருமானவரி செலுத்தத் தேவையில்லை. மொனடிகார்லோ நகரில் 9,500 பேர் இருக்கிறார்கள். மொனக்கோ மத்தியதரைக் கடலில் இருக்கிறது.

சரி... இனி சரியான விடை அனுப்பியவர்களின் பெயர்களைக் கவனிப்போமா? காரைநகர் களபூமியைச் சேர்ந்த கு. சிதம்பரநாத சர்மா, யாழ்ப்பாணம் அருள் யோவான் கல்லூரியைச் சேர்ந்த டி.ரி. ஹென்ஸமன், ஊரெழு மேற்கைச் சேர்ந்த அ கனகசூரியர் ஆகிய மூவருக்கும் எனது விசேஷ பாராட்டுதல்கள்.

**கேள்விமண்டலம்**

ஞாயிற்றுக்கிழமை பாடசாலை ஓய்வு நாள். மச்சாளின் வீடு அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது.

"நாதன் மாமாவுக்கு, நாளை பிறந்தநாளாமே. நீ போகவில்லையா?" என்று கேட்டாள் ஜமுனா.

"நான் போகவில்லை. அவர் போனவருஷம் எனக்கு ஒன்றுமே வாங்கித்தரவில்லை. நான் பரிசு கேட்டபோது பிறந்தநாளை நான் கொண்டாடவில்லை என்று சொல்லிவிட்டார். மாமாவுடன் நான் கோபம்" என்றான் கிருஷ்ணா. அதற்கு வத்சலாவும் ஆமா போட்டாள்.

"எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. போன வருடத்துக்கு முந்திய வருடத்தில்கூட, மாமா பிறந்தநாளைக் கொண்டாடவில்லை. அதென்னது அவர் நினைத்தவருடத்தில் தான் பிறந்தநாள் கொண்டாடுவாரோ..." என்றான் கஜேந்திரன்.

எல்லாவற்றையும் பொறுமையாக இருந்துகேட்ட கௌசி தனது அம்மாவிடம் போய், "அம்மோ'வ் மாமாவின் பிறந்தநாள் எப்போ?" என்று கேட்டாள். அதற்குள் அப்பா குறுக்கிட்டு... "உங்கள் மாமா 61-ம் ஆண்டில் நல்லவேலையில் இருந்தும், நல்ல சம்பளம் எடுத்தும் கூட அப்போது பிறந்த தினத்தை அவர் கொண்டாடவே இல்லை" என்றார்.

சிறிது நேரத்தில் எல்லோரும் 'படை'யெடுத்துக்கொண்டு நாதன் மாமா வீட்டிற்குப் போனார்கள். கஜேந்திரனும் கிருஷ்ணாவும், வத்சலாவும், ஜமுனாவும் வயிறு புடைக்கச் சாப்பிட்டார்கள். கௌசி தனது நாதன் மாமாவை அணுகி... "ஏன் மாமா நீங்கள் போன வருடம், இதற்கு முந்திய வருடம் எல்லாம் பிறந்தநாள் கொண்டாடவில்லை?" என்று கேட்டாள்.

# மான வீரன் இராவணன்

வாகீஸ்

மானம்! மூன்று எழுத்துக்களாலான ஒரு சொல்! ஆனால் அதற்குள்ள மதிப்பினை எவ்வாறு அளவிட முடியும்? எச்சந்தர்ப்பத்திலும் தமது நிலையினின்றும் தாழாது நிலையாய் நிற்பதும் தற்செயலாக ஏதேனும் தாழ்வு நேரிடின் உயிர் வாழாமையுமே மானம் என்கிறார் வள்ளுவர்.

பெண்களின்கூந்தலழகைசங்க காலப்புலவர்கள் எப்படியெல்லாமோ பற்பல உவமைகளைக் கையாண்டு வர்ணித்துள்ளார்கள். ஆனால் அத்தகைய அழகு கேசம் தலையினின்றும் நீங்கி விட்டால் அதன் மதிப்பு? பின் அதை யாரேனும் புகழுகின்றார்களா? இல்லை. அதை யாருமே பொருட்படுத்துவதில்லை அதுபோலவே மனிதரும் தமது உயர்ந்த நிலையை விட்டு நீங்கினால் அவர்களை யாரும் பொருட்படுத்த முனைய மாட்டார்கள். பதிலாக இகழ்வார்கள் - இவ்வாறு கூறுகின்றது தெய்வநூல்.

உயிரே போயினும் நாம் மானம் பெரிதென வாழவேண்டும். மானமிழந்தபின் உயிர் வாழ்வதில் என்ன பயன்? அப்படி மானத்தையே உயிரெனப் போற்றி வளர்த்தவன்தான் 'மானவீரன்' இராவணன். 'இறப்பினும்சீதையை சிறைவிடேன்' என்று கூறிய மானவீரன்தான் இலங்காபுரி யாண்ட இராவணன்.

இலங்காபுரியுலுள்ள அசோக வனத்தில் சீதை சிறைவைக்கப்பட்டிருக்கிறாள் எனபதை அனுமார மூலமறிந்த இராம லக்ஷ்மணர்கள் மாபெரும் வானரப்படையுடன் இலங்கைவந்து சேர்ந்தார்கள். இராவணனோடு யுத்தம் செய்யவிருப்பதாகப் பிரகடனம் செய்தார்கள். அதைக் கண்ணுற்ற இலங்கேஸ்வரன் அஞ்சவில்லை. கலங்கவுமில்லை. போர்க்கோலம் பூண்டான். தம்பி விபீஷணன் யுத்தம், வேண்டாம்; சீதாபிராட்டியைச் சிறைவிடு என வற்புறுத்தியும் இராமபிரானுக்கடிபணிய விரும்பாத இராவணனோ 'உயிர்நீப்பினும் சீதையை விடுவதில்லை' என்று சபதஞ் செய்தான். அதனால் சீற்றமடைந்த விபீஷணன் தன் தமையன்பால் வெறுப்புற்று இராமலக்ஷ்மணர் பக்கஞ் சேர்ந்துவிட்டான். இராவணன் அதையும் பொருட்படுத்தவில்லை.

போர் தொடங்கியது. முதல் நாள் போரிலேயே இராவணன் தோற்றான். ஆனால் அவன் சளைக்கவில்லை. போர் தொடர்ந்து நடைபெற்றது. இராவணனுடைய மகன் இந்திரஜித் இறந்தான். அவனுக்கறிவுரை கூறிய தம்பி கும்பகர்ணன் இறந்தான். உற்றார்கள் உறவினர்கள் போர்வீரர்கள் யாவருமே இராமபாணத்திற்கு இரையாகிக் கொண்டிருந்தனர். அப்படியிருந்தும் இராவணன் அசையவில்லை. அஞ்சாது போர் புரிந்தான். இறுதியில்...மூவுலகங்களையுமே தன் சக்திக்குட்படுத்தி கைலயங்கிரியையே பெயர்த்தெடுக்க முயற்சித்த மாபெரும் வீரன் இராமபாணத்திற்கிரையானன். காரணம் இராவணன் மானத்தைப் பெரிதாக மதித்தான்.

அன்று இராவணன், இராமலக்ஷ்மணர்களுக்குப் பணிந்து போய் சீதையை சிறைவிட்டிருந்தால்...... 'மானிடனாகிய இராமனுக்குப் பயந்து போய் ஒரு மாபெரும் வீரன் பணிந்து விட்டான்' என்ற பழிச்சொல் இன்றும் நிலவிக்கொண்டிருக்கும். ஆனால் இராவணன் மானமுள்ளவன்! நிலையற்ற இந்த உயிரைக் காப்பாற்றுவதற்காக தனக்கு அழியாப் பழியைத் தேடிக்கொள்ள அவன் விரும்பவில்லை. சீதையைச் சிறை விடாமலேயே மானத்தோடுதான் இறந்தான் அந்த மானவீரன்! அன்று அப்படி அந்த 'மானவீரன்' செய்திருக்காவிட்டால் இப்படி நாம் இத்தகைய சுவைமிகு இலக்கியமாகிய இராமாயணத்தை இன்று படித்திருக்க முடியுமா?

# உங்கள் கவனத்துக்கு!

சுமார் பத்து, பதினைந்து வருடங்களுக்கு முன்னர் வெளியான பல தமிழ் சஞ்சிகைகளிலிருந்து கதைகளைத் திருடி சிலர் எழுதுவதாக பலர் எமக்கு புகார் செய்துள்ளனர். சில வாரங்களுக்கு முன்னர் இப்பகுதியில் வெளியான ஒரு கதை சுமார் 20 வருடங்களுக்கு முன்பு வெளியான ஒரு தமிழ் சஞ்சிகையில் இருந்ததாகக்கூறிய எமது மாணவர் மலர் பிரியர் ஒருவர் அந்தச் சஞ்சிகையையே கொண்டுவந்து இரண்டு கதைகளையும், ஒப்பிட்டு நிரூபித்துவிட்டார்! வெட்சம்! எழுத்துத் துறையில் இளைஞர்கள் முன்னேற சந்தர்ப்பம் அளிக்கும் "மாணவர் மலரில்" திருட்டுக்கதைகள் வெளி வருவது மன்னிக்க முடியாத குற்றமாகும். இதை நீங்கள் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும்!

**மாமா சொன்னார்'........'**

நாதன் மாமா சொன்ன அந்த இரகசியம் என்ன என்று உங்களாற் சொல்லமுடியுமா? முடியுமானால் சரியான விடையை எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னர் மாணவர் மலர், 'ஈழநாடு', த. பெ. 49, யாழ்ப்பாணம். என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள். மீண்டும் உங்கள் அனைவரையும் அடுத்த வாரம் சந்திக்கிறேன்.

—சாந்தா

# பொது மேடை

உலக யுத்தத்தில் பயங்கர அனுபவங்கள் என்ற பகுதியைத் தொடர்ந்து படித்தேன். உண்மையிலேயே வாசிக்கும்பொழுது மயிர்க்கூச்செறிந்தது. இதை எழுதிய கோண்டாவில் ஆர். ஜெயாவுக்கு எனது நன்றி.

— ஆர். பி. மேகலதாஸன்,
சாவகச்சேரி.

∴ ∴ ∴

கோண்டாவில் ஆர். ஜெயா எழுதிய "பயங்கர அனுபவங்கள்" படிக்கப் படிக்க உணர்ச்சியூட்டியது. மாணவர் மலர் ஆசிரியர் தெரிவித்திருந்ததைப போன்று இரண்டாவது உலகயுத்தம் நடைபெற்ற இடத்துக்கே - ஐரோப்பாவுக்கே எங்களை அழைத்துச் சென்று விட்டார், ஜெயா.

— கே. வசந்தி,
வண்ணார்பண்ணை.

∴ ∴ ∴

இதே போன்று திருக்கோணமலை பி. திருச்செல்வன், கண்டிக்குளி கே. லோகநாயகி, சுழிபுரம் கமலாதேவி, வட்டுக்கோட்டை அ. மயில்வாகனம், சுன்னாகம் கே. ராஜமனோகரன் ஆகியோர் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

கிரிக்கட்

# ஹாட்லி - சென்.ஜோன்ஸ் போட்டி வெற்றியின்றி முடிவு

## நெல்லியடியில் வித்தியாலயம் தோல்வி

உடுப்பிட்டி, திங்கள்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையே கடந்த வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ஹாட்லி மொத்தம் 265 ரன்களைப்பெற்றது.

முதலாம் இன்னிங்ஸில் ஹாட்லி உதவிக் காப்டன் நடராஜசுந்தரம் 120 ரன்களும் திலகரத்தினம் 50 ரன்களும் பவானந்தன் 25 ரன்களும் பெற்றனர். சென்.ஜோன்ஸ் காப்டன் முதல் இன்னிங்ஸில் 319 ரன்களும், தெய்வேந்திரா 87 ரன்களும் பெற்றனர்.

இரண்டாம் இன்னிங்ஸில் ஹாட்லிக்கோஷ்டியினர் 8 விக்கெட்டுகளையிழந்து 161 ரன்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்தினர். சென்.ஜோன்ஸ் 2 விக்கெட்டுகளையிழந்து 13 ரன்கள் மாத்திரம் பெற்றனர். இதனால் ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

**வித்தியாலயம் தோல்வி**

நெல்லியடி அரசினர் மத்திய கல்லூரிக்கும் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்திற்குமிடையே நெல்லியடி அரசினர் மத்திய கல்லூரி மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கிரிக்கெட்போட்டியில் வண்ணை வைத்தீஸ்வராக் கோஷ்டியினர் முதலில் துடுப்பெடுத்தாடி 72 ரன்களைப்பெற்றனர். உதவிக் காப்டன் 47 ரன்களை எடுத்தார்.

நெல்லியடி மத்திய கல்லூரி கோஷ்டியினர் தமது முதலாவது இன்னிங்ஸில் 109 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். காப்டனான திரு. செ. சத்தியமூர்த்தி 49 ரன்களைப் பெற்றும் ஆட்டமிழக்கவில்லை.

இரண்டாவது இன்னிங்ஸில் வண்ணை வைத்தீஸ்வராக் கோஷ்டி 65 ரன்களை மாத்திரம் பெற்றது. நெல்லியடி அரசினர் மத்திய மகாவித்தியாலயம் 2 விக்கெட்டுகளை யிழந்து 3? ரன்களைப் பெற்று 8 விக்கெட்டுகளாலும் ஒரு ரன்னாலும் வெற்றிபெற்றது. இறுதி 6 ரன்களையும் சு. பொன்னுத்துரை என்னும் துடுப்படிவீரர் ஒரே அடியில் பூர்த்தி செய்தார்.

## தமிழ், ஆங்கில பேச்சுப்போட்டிகள்

உடுப்பிட்டி, திங்கள்

நெல்லியடி அரசினர் மத்திய மஹா வித்தியாலய கம்பன், பாரதி, வள்ளுவன், இளங்கோ ஆகிய இல்லங்களுக்கிடையே நடைபெற்ற தமிழ், ஆங்கில பேச்சுப்போட்டி முடிவுகள் வருமாறு:-

**தமிழ் பேச்சுப்போட்டி**

மேற்பிரிவு: ஆண்கள்-நா. சண்முகநாதன், பெண்கள்- கே. இலட்சுமியம்மா.

கீழ்ப் பிரிவு: ஆண்கள்- க. இராமச்சந்திரன், பெண்கள்- எஸ். பாலாம்பிகை.

மத்தியபிரிவு: ஆண்கள்-என். மணீஸ்வரன். பெண்கள்- தா. கனகாம்பிகை.

**ஆங்கிலப் பேச்சுப்போட்டி**

மேற்பிரிவு: ஆண்கள்- எம். ரகுபதி, பெண்கள்- கே. சரோஜாதேவி.

கீழ்ப்பிரிவு: ஆண்கள்-ரி. பாலதாசன், பெண்கள்-தா. நீலாம்பிகை.

மத்தியபிரிவு: ஆண்கள்-என். மணீஸ்வரன், பெண்கள் சி. சுசீலாதேவி.

## புதுவருட உத்தியோகத்தர்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

வலி-கிழகு கூட்டுறவு பால் பண்ணை பொதுக் கூட்டம் திரு. ஈ. கே. சன்முகநாதன் தலைமையில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்றது.

வட்டாரப் பரிசோதகர் திரு. இராமநாதன் பாற்பண்ணையின் அவசியத்தைப் பற்றி வற்புறுத்திப் பேசினர்.

புதுவருட உத்தியோகத்தர்களாக கீழ் காணுவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. ஜி. ஏ. நைல்ஸ், உபதலைவர்: திரு. ஜி. வைத்திலிங்கம், காரியதரிசி: திரு. எஸ். கனகசபாபதி, தனாதிகாரி: திரு. எஸ். செல்லத்துரை நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

லாம் செய்துகொள்கின்றாரென்று அடக்கமாகச் சொன்னார் அவர்.

அங்கு வேலை செய்யும் சிற்பிகள் தமிழகத்திலிருந்து வந்துள்ளவர்கள். இன்னும் சில சிற்பிகளுக்கும் அனுமதி கிடைத்துள்ளதாம். இந்தக் கெடுபிடி தர்பாரில் இது ஆச்சரியமல்லவா? முருகன் நினைத்தால் எதுதான் நடவாது!

பூதேவி, ஸ்ரீதேவியுடன் நீலமேக சியாமளரான மகாவிஷ்ணு, இங்கிருந்து இன்னும் சில நாட்களில் திருக்கேதீச்சரத்தில் கோயில்கொள்ளத் தயாராகக் காத்திருப்பதைக் கண்டேன் முகத்தில் தான் எவ்வளவு பொலிவு எவ்வளவு அழகு!

இக்காலத்திலே தொழிற்சாலைகள் தான் 'நவீன கோயில்'கள் என்றார் பிரதமர் நேரு. இங்கு மாவிட்டபுரத்திலே நவீன (தொழிற்சாலை) கோயிலுடன், பழைய கோயிலும் வளர்ந்தோங்கி வருவதைக் காண மிக மகிழ்ச்சியாக இருந்தது. வாழ்க மாவிட்டபுரம்.

* * *

அதிரா விளைகள் அறுப்பாய் போற்றி ஆலநிழற் கீழ் அமர்ந்தாய் போற்றி, சதுரா சதுரக் குழையாய் போற்றி, சாம்பர் மெய்ப்பூசும் தலைவா போற்றி, எதிராவுலகம் அமைப்பாய் போற்றி யென்றும் மீளா அருள் செய்வாய் போற்றி, கதிரா கதிருக்கோர் கண்ணே போற்றி கயிலைமலையானே போற்றி போற்றி.

— திருநாவுக்கரசர்.

## டட்லிக்கு வரவேற்பு

ஹட்டன், திங்கள்

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் வகுப்பு மாணவர்கள் சுமார் 600 பேர் கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்காவிற்கு மாபெரும் வரவேற்பு அளித்தார்கள். இந்த அரசியல் வகுப்புகள் திருவாளர்கள் ஐ. எம். ஆர். ஏ இரியகொலை, டொனல்ட் ரணவீரா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

குறிப்பு இல. எல் ஏ/8/48/6 (460-ம் அ தியாயக்) காணி கொள்ளுஞ் சட்டம்.

7-ம் பிரிவின்படியான அறிவித்தல்.

கீழே விவரிக்கப்பட்டிருக்கும் காணியைப் பொதுத் தேவையொன்றிற்கென எடுத்துக்கொள்ள எண்ணியிருக்கப்படுகின்றது. மேலதிக விபரங்களுக்குத் தயவுசெய்து 28-2-64-ந் திகதியின் 13,961-ம் இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

அட்டவணை.

காணியின் பெயர்: கொன்னகஹவத்தை, குருப்புமுல்லைத் தெரு இலக்கம் 104 இன் பகுதி.

கிராமப் பெயர்: மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தோட்டமுனை, பாணந்துறை நகர சபை எல்லைக்குள் உடகமுலுபட்டியா, வட்டார இல. 7, குருப்புமுல்லை

துண்டு, ப. இல: பீ. பீ. ஏ. 5221 துண்டு இல. 1.

ஆர். பாஸ்கரலிங்கம்.
களுத்துறை மாவட்ட உதவி அரசாங்க அதிபரும், காணிகொள்ளும் அதிகாரியும்.

எனது இல. எல். ஏ. 3874

இலங்கைச் [illegible] அத்தியாயமான காணி [illegible] டத்தின் 7-ம் பிரிவின் கீழ் உள்ள அறிவித்தல்.

கீழ்க் காட்டிய அட்டவணையில் உள்ள காணியை எடுத்தற்கு உத்தேசித்திருக்கிறது. முழு விபரங்களும் 28-2-64-ந் திகதியின் இலக்கம் 13,961 கொண்ட அரசாங்க கசற் பத்திரிகை பாகம் III பார்க்கவும்.

அட்டவணை

கிராமத்தின் பெயர்: முகுணுவட்டவன.

பிரிவுக்காரியாதிகாரியின் பகுதி: பிற்றிக்கால் கோறளை வடக்கு, சிலாபம்.

காணியின் பெயர்: விகாரகெல, விகாரகெலவத்தை.

லொட்: 1, 2&3. பீ. பீ. ஏ. 1510.

ஒப்பம்/லெனட் பனம்பலன.
அரசாங்க உதவி அதிபர்,
புத்தளம் டிஸ்திறிக்.

## செயலாளர் தேவை

1. யோகபுரம் 2-ம் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு நிர்வாகச் செயலாளர் தேவை.

2. விண்ணப்பங்கள் 14-3-64க்கு முன் பதிவுத் தபாலில் கௌரவ காரியதரிசி, ப. நோ. கூ. சங்கம், யோகபுரம் 2-ம் பகுதி, துணுக்காய் என விலாசமிட்டு இடதுமேல் மூலையில் 'காரியதரிசி விண்ணப்பம்' என எழுதப்பட்டு அனுப்பப்பட வேண்டும்.

**தராதரம்**

1. வயது: 25-க்கு மேல்.
2. கல்வி: S. S. C. ஆங்கிலம். (தமிழ் எழுத வாசிக்க)
3. பிணை: ரொக்கம் 1000/-
   ,, ஆதனம் 2000/-
4. ஒழுக்க சான்றிதழ்: D. R. O., கடைசியாகக் கல்வி கற்ற கல்லூரிதலைமை ஆசிரியர்.
5. கூட்டுறவுப் பாடசாலையில் சித்தியடைந்தவருக்கு விசேட சலுகையுண்டு.

குறிப்பு: பிணைப்பணம் 500 உடனடியாகச்செலுத்தி மீதி 500ஐ மாதவீதம் சம்பளத்திம் கழிக்கும் ஒழுங்கும் செய்யலாம். சம்பளம் தராதரத்திற்கேற்ப வழங்கப்படும்.

கா. தம்பு,
29-2-64 காரியதரிசி. 104

## போட்டி முடிவுகள்

சுழிபுரம், ஞாயிறு

சண்டிருப்பாய் இந்துக் கல்லூரி இல்லங்களுக்கிடையே அண்மையில் நடைபெற்ற பேச்சுப்போட்டி, உடற்பயிற்சி முடிவுகள் வருமாறு:-

**பேச்சுப்போட்டி**

கீழ்ப்பிரிவு: சி. இராசலிங்கம், (சுப்பிரமணியம் இல்லம்), க. அரசரத்தினம், (ஜெகராசன் இல்லம்), த. செல்வரத்தினம், (ஜெ. இ.),

மத்தியபிரிவு: எஸ். திலகநாதன், (ஜெ. இ.), எஸ். பாலகிருஷ்ணன், (ஜே. இ), கே. பரிமளசிங்கம், (ஜெ இ.).

கீழ்ப்பிரிவி: த. விசுவரத்தினம், (ஜெ. இ.), ந. சிவகுமார், (சு. இ), க. சிவபாலன், (தில்லையம்பலம் இல்லம்).

**உடற்பயிற்சி**

ஆண்கள்: தில்லையம்பலம் இல்லம், சுப்பிரமணியம் இல்லம், ஜெகராசன் இல்லம்.

பெண்கள்: சுப்பிரமணியம் இல்லம், ஜெகராசன் இல்லம், தில்லையம்பலம் இல்லம்.

## 1000 ரூபா அபராதம்

சிலாபம், திங்கள்

சிலாபத்தைச் சேர்ந்த டபிள்யு. எஸ். அனமரிசாமி என்பவர் 284 திராம் கசிப்பு வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் சிலாபம் நீதிபதி திரு. எஸ். செல்லையா 1000 ருபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

## வானொலிநிகழ்ச்சிகள்

**செவ்வாய் 3-3-64**

**கொழும்பு**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5 00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல், 7-00 இருபது கேள்விகள், 7-30 சித்திரம் — 'நவரசம்'-எழுதியவர் வி. என். பாலசுப்பிரமணியம், 8 00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நேயர்விருப்பம், 9-45 நாகஸ்வரம் — ஏ. அங்கப்பா.

## மக்களின் முன்னேற்றம்

கேகாலை, திங்கள்

இலங்கையிலுள்ள மக்கள் கலாச்சாரத்திலும், சமயப்பற்றிலும் விரைவாக முன்னேறி வருவதாக கல்வி, கலாச்சார மந்திரி கிரு. பி. பி. ஜி. கலுகல்லை புதிய விகாரை ஒன்றைத் திறந்துவைத்துப்பேசும்போது கூறினர்.


ரெமி பொரேட்டட் டல்கம் பவுடர்




ரெமி பவுடரைப் பாவித்திருக்கிறீர்களா? சிறந்த பவுடருக்கு இணையான இந்த உயர்ந்த பவுடர் - வெகு நியாயமான விலைகளில் கிடைக்கும். அதி உன்னத மூலப் பொருட்களினுல் ஆக்கப்பட்ட ரெமி மிக லளிதமாக வாசனையூட்டப்பட்டுள்ளது. உங்கள் வியாபாரிகளிடத்தில் 2 சைஸ் டின்களில் கிடைக்கும்.

ஆவ்ரா அன் கம்பனி,
19, செட்டியார் தெரு, கொழும்பு.
போன்: 7211, 7212


## 'ஐயோ' என்றசத்தம்கேட்டதும் நான் அங்கு சென்றேன்'

### காரைநகர் கொலைவழக்கில் சாட்சியம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

"நான் வசிக்கும் வீட்டிற்கு மேற்குப் பக்கமாக ஐயோ! ஐயோ!! என்ற பெண் குரல் சத்தம் கேட்டது. இரவு 11 மணியளவில் சம்பவம் நடந்த இடத்திற்கு சின்னத்தம்பி, வேலுப்பிள்ளை என்பவர்களுடன் போனேன். வீட்டினுள் அரிக்கன்லாம்பு எரிந்துகொண்டிருந்தது. அங்கே ஐயம்பிள்ளை கந்தையா இறந்து கிடந்தார்."

ஊர்காவற்றுறை பொலிஸ் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. அரசுவால்டன் முன்னிலையில் காரைநகர் கொலை வழக்கு வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சாட்சியமளித்த பஸ் இன்ஸ்பெக்டர் வேலுப்பிள்ளை நல்லதம்பி மேற்கண்டவாறு கூறினர்.

காரைநகரைச் சேர்ந்த ஐயம்பிள்ளை கந்தையாவைக் கொலை செய்ததாக அதே ஊரைச் சேர்ந்த வி. பரமசாமிமீதும் கொலைசெய்யச் சதிசெய்ததாக இறந்தவரின் மனைவி பராசக்தி மீதும் குற்றம்சாட்டி ஊர்காவற்றுறைப் பொலிசாரால் தொடரப்பட்ட இந்த வழக்கு விசாரணையைப் பார்ப்பதற்குப் பார்வையாளர்கள் மண்டபம் நிறையக் குழுமியிருந்தனர்.

எதிரிகள் தரப்பில் புரக்டர் திரு. வி. என். நாதன் உதவியுடன் புரக்டர் திரு. ஆர். விசுவநாதன், புரக்டர். திரு. எஸ். வி. கதிரவேலு ஆகியோரும் வழக்காளி சார்பில் புரக்டர் பி. கதிரவேலு அனுசரணையுடன் அட்வக்கேட் திரு. ரி. கணேசலிங்கமும் ஆஜராகினர்.

சாட்சி மேலும் கூறியதாவது:-

"இறந்து கிடந்த இடத்திற்கு நான் போனபோது இறந்தவரின் மனைவி மகளுடன் அழுது கொண்டு இருந்தார். "இச்சம்பவம் எப்படி நடந்தது என முதலாவது எதிரியை விசாரித்தேன். "இரண்டு பேர் கொண்டுவந்து போட்டுவிட்டுப் போய்விட்டினம். விளக்கு இல்லை. ஆனால் வெள்ளை வேட்டி தெரிந்தது" என்று முதலாவது எதிரி சொன்னர். சம்பவம் நடந்த அடுத்தநாள் காலை 7 மணிக்கு விதானையாருக்கு முறைப்பாடு கொடுத்தேன்."

பரமு கதிரவேலு சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"சம்பவம் நடந்தஅன்று வீட்டில் இருந்தேன். ரோட்டில் ஆட்கள் அமளியாகக் கதைத்த சத்தம் கேட்டு விசாரித்தபோது ஐயம்பிள்ளை கந்தையா இறந்தமை பற்றி அறிந்தேன். சம்பவம் நடந்த அடுத்தநாள் விடிய 4 மணிக்கு இறந்தவரின் தந்தையான ஐயம்பிள்ளைக்கு அறிவித்தேன். வைத்தியலிங்கம் குமாரசாமியும் என்னுடன் வந்தார்.

குறுக்கு விசாரணையின் போது முதலாவது எதிரி அழுதகுரல் தனக்குக் கேட்கவில்லைஎனக் சாட்சி கூறினர். மேல்விசாரணை அடுத்தமாதம் 12-ந் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.


வர் விளம்பரம்

**தொய்வு, நீரிழிவு**

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பபணம்.


## ஏற்பினல் மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்

பாஷையூரைச் சேர்ந்த சூசைதாஸ் அல்போன்ஸஸ் என்பவர் ஏற்புவலி காரணமாக மரணமானர். இவரின் மரணம் குறித்து திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. கனகரத்தினம் விசாரணை நடத்தியபோது, குறிப்பிட்ட இளைஞர் கடலில் மீன்பிடிக்கச் சென்றபோது காலில் சிப்பி குத்திக் காயம் உண்டானது என்று தெரிவிக்கப்பட்டது.

ஏற்புவலி காரணமாக மரணம் சம்பவித்தது என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

# "வகுப்பு செளஜன்யத்தை நிலைநிறுத்துக"

## பாகிஸ்தானுக்கு இந்தியா கோரிக்கை

புதுடில்லி, மார்ச் 2

வகுப்பு செளஜன்யத்தை நிலைநிறுத்துமாறு பாகிஸ்தானைக் கோரும் குறிப்பு ஒன்றை இந்தியா புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் தூதர் மூலம் அனுப்பியுள்ளது.

இந்திய வெளிநாட்டு உதவி மந்திரி ஸ்ரீமதி லக்ஷ்மிமேனன் ராஜ்யசபையில் பேசியபோது தீவைத்தல், கொள்ளை, கடத்தல் போன்ற அட்டூழியங்கள் மூலம் கிழக்கு பாகிஸ்தானிலிருந்து 35,000 கிறிஸ்தவர்களும், ஹிந்துக்களும் வெளியேறி வந்திருப்பதாயும், இவர்களில் 20,000 பேர் ரோமன் கத்தோலிக்கர்கள் என்றும், 15,000 பேர் இதர கிறிஸ்தவர்கள் என்றும் குறிப்பிட்டார். வெளியேறி வந்த அகதிகள் மீது பாகிஸ்தானியர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# 9 வட்டாரங்களில் 33 பேர் போட்டியிடுகின்றனர்

## வேலணை கிராமசபைத் தேர்தல்

ஊர்காவற்றுறை, திங்கள்

வேலணைக் கிராம சபையின் தேர்தலுக்கான அபேட்சகர்கள் நியமன பத்திரங்களை யாழ்ப்பாணம் கச்சேரியைச் சேர்ந்த தேர்தல் அதிகாரி திரு. கே. கணபதி இன்று ஏற்றுக்கொண்டார். ஒன்பது வட்டாரங்களைக்கொண்ட இக்கிராம சபைக்கு 33 பேர் போட்டியிடுகிறார்கள். கட்சி அடிப்படையில் அபேட்சகர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ், இடதுசாரி ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் பலர் இத்தேர்தலில் கலந்துகொள்ளுகின்றனர். தற்போதைய அங்கத்தவர்களில் நால்வர் போட்டியிடாது விலகிக்கொண்டனர், திரு.ச. மாணிக்கவாசகர், திரு. சு. தர்மலிங்கம், திரு. த. இராமசாமி திரு. ச. சபாரத்தினம் ஆகியவர்களே விலகிக்கொண்ட அங்கத்தவர்களாவர். 7-ம் வட்டாரத்தில் தந்தை, மகன், மருமகன் மூவரும் போட்டியிடுகின்றனர். போட்டிவிபரம் பின்வருமாறு:-

**1-ம் வட்டாரம்**

கணபதிப்பிள்ளை சதாசிவம் தற்போதைய தலைவர்-(சேவல்) செல்லப்பா சண்முகலிங்கம் (தராசு), சடையர் கதிரவேலு (சூரியன்), ஆறுமுகம் சின்னராசா (சைக்கிள்) சரவணை முருகேசு (மணி),

**2-ம் வட்டாரம்**

கந்தையா தில்லையம்பலம் (சூரியன்), ஆசைப்பிள்ளை செல்லத்துரை (தராசு), சபாபதிப்பிள்ளை சண்முகராசா (சேவல்), வைத்திலிங்கம் நாகலிங்கம் (சைகக்கிள்).

**3-ம் வட்டாரம்**

வைரமுத்து கதிரவேலு (சூரியன்), பொன்னையா நமசிவாயம் (சேவல்), சித்தன் சின்னத்தம்பி (தராசு), சின்னையா சதாசிவம் (தற்போதைய அங்கத்தவர்-சைக்கிள்)

**4-ம் வட்டாரம்**

பிள்ளையார் கந்தையா (சூரியன்), சங்கரப்பிள்ளை கைலாசபிள்ளை (பஸ்), ஐயம்பிள்ளை கந்தையா (சைக்கிள்). முருகேசு விளுசித்தம்பி (தற்போதைய அங்கத்தவர்-தராசு).

**5-ம் வட்டாரம்**

இளையதம்பி கைலாசபிள்ளை (சேவல்), புத்திரங்கொண்டார் சுப்பிரமணியம் (தராசு), சாந்தலிங்கம் சண்முகராசா (சைக்கிள்).

**6-ம் வட்டாரம்**

முத்தன் ஆறுமுகம் (சைக்கிள்), சின்னத்தம்பி கந்தவனம் (சூரியன்), சரவணமுத்து பொன்னம்பலம் (தராசு), குலசேகரம்பிள்ளை முத்துத்தம்பி (மரம்).

**7-ம் வட்டாரம்**

மருதையனர் கனகசபாபதிப்பிள்ளை (தராசு), செந்தில்நாதன் கணபதிப்பிள்ளை (சூரியன்), தம்பு சாந்தலிங்கம் (சேவல்).

**8-ம் வட்டாரம்**

ஆர். பொன்னப்பா சண்முகநாதன் (சைக்கிள்), நாகலிங்கம் துரைச்சாமி (தற்போதைய அங்கத்தவர்-சூரியன்)

**9ம்- வட்டாரம்**

பசுபதிப்பிள்ளை கந்தசாமி (தற்போதைய அங்கத்தவர்—சைக்கிள்), வைத்திலிங்கம் பரமசுந்தரம் (சேவல்), ஆறுமுகம் மார்க்கண்டு (கப்பல்), நாகலிங்கம்சுந்தரம் (புத்தகம்)

## "தமிழில் விஞ்ஞானம்"

உடுப்பிட்டி, திங்கள்

"தமிழர்களாகிய நாம் தாய்மொழியில் விஞ்ஞானம் பயில்வது கடினமானதோர் காரியமல்ல. இலங்கை மொழித் திணைக்களத்தின் மொழிபெயர்ப்பாளருள் ஒருவனுகிய என்னுடைய அனுபவத்தில் ஆங்கிலத்திலுள்ள சகல விஞ்ஞானச் சொற்களுக்கும் ஏற்ற தமிழ்க் கலைச் சொற்களை உபயோகிக்கமுடியும் என்று நம்புகின்றேன். ஆனாலும் விரிந்த ஆராய்ச்சிக் கருத்துக்களைக்கொண்ட நூல்கள் ஜெர்மன், பிரெஞ்சு, ரஷ்ய, அமெரிக்க மொழிகளிலேயே உள்ளன. ஆங்கில அறிவு இல்லாமல் விஞ்ஞான உலகில் பாண்டித்தியம் பெறமுடியாது. எனவே விஞ்ஞானக் கல்வியைத் தமிழிலேயே படித்துக்கொண்டு அவற்றை நன்கு விருத்திசெய்வதற்காக ஆங்கிலக் கல்வியைப் பயிலவேண்டும். இதன் மூலமே தமிழர்கள் விஞ்ஞானத்துறையில் முன்னேறமுடியும்."

நெல்லியடி அரசினர் மத்திய மகாவித்தியாலய விஞ்ஞானக் கழகத்தாரால் நடாத்தப்பட்ட விசேஷ பொதுக் கூட்டம் ஒன்றில் பிரதம பேச்சாளரான முன்னாள் உதவிவித்தியாதிபதி திரு. க. ச. அருள்நந்தி மேற்கண்டவாறு கூறினார்.

## ஷேக் அப்துல்லா கடிதம்

புதுடில்லி, மார்ச் 2

சிறையிலிருக்கும் முன்னாள் காஷ்மீர் பிரதமர் ஷேக் அப்துல்லாவிடமிருந்து கடிதம் ஒன்று கிடைத்திருப்பதாக பார்லிமெண்டில் அறிவிக்கப்பட்டது.

## விண்ணப்பத்தில் மோசடி

கொழும்பு, திங்கள்

கூட்டுறவு இன்ஸ்பெக்டர் கோஷ்டியொன்று சீனி, மாவினியோகத்தில் நடைபெற்றுள்ள ஒரு மோசடியை கண்டுபிடித்துள்ளது.

கொழும்பு,ஐக்கிய கூட்டுறவு சங்கத்திற்கு விண்ணப்பித்தவர்களில் பலர் பதிவுசெய்யப்படாத போலி விண்ணப்பதாரர்களென கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## கிராமசபையில் கைகலப்பு

மாவிட்டபுரம், திங்கள்

மல்லாகம் கிராமசபையின் மாதாந்தக் கூட்டம் சென்ற சனிக்கிழமை தலைவர் திரு. சிவகுரு தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கிராமசபை ஊழியர் ஒருவர் சம்பந்தமாக காரசாரமான விவாதம் நடைபெற்றபோது பார்வையாளர் ஒருவர் தலைவரை பதவியிலிருந்து நீக்கும்படி கூச்சலிட்டார். இதைத் தொடர்ந்து சபை அங்கத்தவர் ஒருவருக்கும், கூச்சலிட்ட பார்வையாளருக்குமிடையில் கைகலப்பு நடைபெற்றது. கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. இக்கைகலப்புச் சம்பந்தமாகச் சுன்னாகம் பொலிசார் விசாரணை செய்கிறார்கள்.

## கோலாலம்பூரில் ஸ்ரீ மணிபாகவதருக்குப் பாராட்டு

கோலாலம்பூர், மார்ச் 2

கோலாலம்பூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவிலில், வண்ணை ஸ்ரீ மணிபாகவதருக்கு சென்ற பெப்ரவரி 29-ந் திகதி சனிக்கிழமை ஒரு பாராட்டுவிழா நடைபெற்றது. சைவத்துக்கும் தமிழுக்கும் பாகவதர் செய்யும் சேவையைப் போற்றி அவருக்கு திரு. வி. தில்லையம்பலம், மகர சண்டிகை அணிவித்து, சிரமாலை சூட்டி கௌரவித்தார். 'ருத்திராட்சித்தின் மகிமை' என்பதுபற்றி பாகவதரின் கதாகாலட்சேபம் நடந்தபின், திருவிதி திரு உலாவுடன் வைபவம் நிறைவேறியது

## கலவரம்பற்றி விசாரணை

கொழும்பு, திங்கள்

பல்கலைக்கழக கவுன்சிலால நியமிக்கப்பட்ட விசேஷ கமிட்டி மாணவர்களுக்கும் பிக்குகளுக்குமிடையே பெப்ரவரி 22-ந் திகதி ஏற்பட்ட கலரத்தைப பற்றி விசாரணை செய்யுமெனத் தெரியவருகிறது

மாணவர்களிடமிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் 300 பெட்டிசங்கள் கமிட்டிக்குக் கிடைத்திருக்கின்றன. இப் பெட்டிசன்களை கமிட்டி ஆராய்ந்து, சாட்சியமளிக்க யாரை அழைப்பதென முடிவுசெய்யும்.

## 2 மாதங்களில் 101 கொலைகள்

கொழும்பு, திங்கள்

கடந்த இரு மாதங்களில் நடைபெற்ற கொலைகள் 100க்கு மேலாகக் கூடிவிட்டது. 60 நாட்களில் 101 கொலைகள் நடைபெற்றுள்ளதாக பொலிஸ் தலைமைக் காரியாலத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் 56 கொலைகளும், பெப்ரவரி மாதம் 45 கொலைகளும் இடம்பெற்றிருக்கின்றன.

## பக்தவத்சலம்- நெடுஞ்செழியன் சந்திப்பு

சென்னை, மார்ச் 2

முதல் மந்திரி திரு. பக்தவத்சலத்தை தி. மு. கழகத் தலைவர் திரு. நெடுஞ்செழியன் சந்தித்தார்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறை சென்ற தி. மு. கழகத்தனரை சிறையில் சென்று காண்பதற்கு உறவினர்களுக்குள்ள வசதி நண்பர்களுக்கு இருப்பதில்லை என முதலமைச்சரிடம் அவர் தெரிவித்தார். இது பற்றி ஆவன செய்வதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

## கிளைடர் விமான உற்பத்தி

புதுடில்லி, மார்ச் 2

கான்பூரில் 40 கிளைடர் விமானங்கள் உற்பத்தி செய்யப்பட்டிருப்பதாயும், 30 விமானங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருவதாயும் அறிவிக்கப்படுகிறது.

## தமிழர் ஐக்கிய ...:

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறுபான்மையோர் பிரச்னைக்கு தேசிய ரீதியில் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யும் இச்சமயத்தில் சிறுபான்மையினர் தங்கள் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஐக்கியமாக ஒரு கொள்கைத் திட்டத்தை வகுத்துக்கொள்ளவேண்டுமென்ற அபிப்பிராயம் அரசியல் கட்சியைச் சேர்ந்த சிலரிடம் வலுப்பெற்றதே இந்த ஐக்கிய முன்னணி முயற்சி மீண்டும் ஆரம்பித்துள்ளதற்குக் காரணமாகும்.

இவ்வார இறுதிக்குள் அல்லது அடுத்த வாரத்தில் ஐக்கிய முன்னணி சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் நடைபெறக் கூடுமெனவும் அறியப்படுகிறது.

## மொழி மகாநாட்...

(1-ம் பககத் தொடர்ச்சி

தமிழரசுக் கட்சியின் குறைந்தபட்சக் கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டே பேச்சுவார்த்தை நடத்துவார் என நம்பக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் முன் குறிப்பிட்ட நான்குதலைவர்களுடனும் தனித் தனியே பேச்சுவார்த்தை நடத்திய பின்னர், சர்வகட்சிகளின் பிரதிநிதிகளையும் கொண்ட மகாநாட்டைக் கூட்டுவார். மண்டல சார்பற்ற மகாநாட்டுக்கான தூதர் கட்ட மகாநாடு முடிவடைந்த பின்னரே இந்த சர்வகட்சிமகாநாடு நடைபெறும் எனவும் தெரியவருகிறது.

சென்ற மாதம் 19ம் திகதி கூடிய மந்திரிசபையில் தமிழ் பேசும் மக்களை எதிர் நோக்கியுள்ள சில கஷ்டங்கள் குறித்தும், வடகிழக்கு மாகாணங்களில் சிங்களத்தை அமுல் நடத்துவது பற்றியும் பரிசீலனை செய்யப்பட்டு, மொழிப் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்கு வட்டமேசை மகாநாட்டை கூட்டுவதென முடிவு செய்யப்பட்டது.

## தந்திகள் தாமதமாகலாம்

கொள்ளுப்பிட்டி, திங்கள்

கொழும்பு மத்திய தந்திக் கந்தோரிலிருக்கும் 47 தந்தி கொடுக்க உதவும் இயந்திரங்களில் 40 பழுதாகிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இங்கிருந்து அனுப்பப்படும் தந்திகள் மிகவும் தாமதமாகவே அனுப்பப்படுகின்றன. பல தபால் மூலம் அனுப்பப்படுகின்றன. இந்த நிலையால் ஆயிரக்கணக்கான தந்திகள் இங்கு குவிந்து கிடக்கின்றன.

இதற்கிடையில் தந்தி ஊழியர்கள் வேலைநிறுத்தம்செய்யலாமெனவும் நம்பப்படுகிறது.

## அமைதியை நிலைநாட்டுமாறு கோரிக்கை

புதுடில்லி, மார்ச். 2

கிழக்குப்பாகிஸ்தானில் அமைதியைத் தோற்றுவித்து வகுப்பு ஒற்றுமையை நிலைபெற செய்ய நடவடிக்கை எடுக்குமாறு இந்திய அரசாங்கம் பாகிஸ்தானுக்கு மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுசம்பந்தமாக சென்ற சனிக்கிழமை இந்திய அரசாங்கம் இந்தியாவிலுள்ள பாகிஸ்தான் ஹைகமிஷனரிடம் ஒப்படைத்துள்ள ஒரு குறிப்பில் கிழக்குப்பாகிஸ்தானிலிருந்து சிறுபான்மை இன மக்கள் வெளியேறுவதைத் தடைசெய்ய ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளும்படி கேட்டுள்ளது.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | நவா (கும்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | வெம்பிளி (கண்டி) | விஜயா (மட்டக்களப்பு)

மற்றும் 3 திரைகளில்

சிவாஜி கணேசன் — விஜயகுமாரி

முத்துராமன் — சௌகார் ஜானகி

மற்றும் பலர் நடிக்கும்



பார் மகளே பார்

பணம், அந்தஸ்து, மதிப்பு இவைதான் வாழ்க்கையின் உயிர்நாடி என்று கருதும் ஜமீன்தாராக நடிகர்திலகமும் அவரது இரு புதல்விகளாக புஷ்பலதாவும் விஜயகுமாரியும் தோன்றுகிறார்கள்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் -1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.